# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

www.ilakku.org

Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1

இதழ் 231 | சனி, ஏப்ரல் 22, 2023 | 13 பக்கம்






## ஆக்கிரமிக்கும் சிலைகளும் அழிக்கப்படும் சிலைகளும்

அகிலன்



## ஒரு அரசியல் கைதியின் சிறைப்பட்டறிவு

விடுதலையின் பின் இலக்கு ஊடகத்துடன் தனது அனுபவங்களை பகிர்கின்றார் செல்லையா சதீஸ்குமார்

இறுதி பகுதி

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நிலை குறித்து சிந்திக்க வேண்டும்

மட்டு.நகரான்




© 2023 இலக்கு இணையம்

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் சில விடயதானங்கள் தொடர்பில் அமெரிக்கா கவலை



பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான விரிவான, பொது மற்றும் பாராளுமன்ற விவாதங்களுக்கு அழைப்பு விடுப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்ததாக அவர் தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச தரத்திற்கு புறம்பாக முன்மொழியப்பட்ட சட்டமூலத்தின் சில விடயதானங்கள் தொடர்பில், கவலை வெளியிட்டதாகவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக, பொது மற்றும்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

## ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் தீர்ப்பாயம் இலங்கைக்கு எதிராகத் தீர்ப்பு

இலங்கை காவல்துறையினரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு தீர்ப்பாயத்தின் 17 பேரடங்கிய நீதியரசர் குழாம் இலங்கைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சுவிஸ்லாந்துக்குத் தப்பிச் செல்வதற்கு முன்னதாக இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரொருவர் சுமார் ஒருமாதகாலமாக கிரிக்கெட் துடுப்புமட்டையால் தாக்கப்பட்டமை, மின் சாரத்தாக்குதல், வன்புணர்வு என்பன உள்ளடங்கலாகப் காவல்துறையினரால் மிகுந்த சித்திரவதை களுக்கு உட் படுத்தப்பட்டுள்ளார். அவரின் சார்பில் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் மீளாய்வுக்குழுவிடம் முறைப்பாடளிக்கப்பட்டது.

அதன்படி இம்முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

## இரண்டு இராணுவ ஜெனரல்களுக்கு இடையிலான மோதல் - சூடானில் 270 பேர் பலி



சூடானில் இரண்டு இராணுவ ஜெனரல்களுக்கு இடையில் ஏற்பட்ட அதிகார போட்டியினால் ஏற்பட்ட மேதல்களில் இதுவரை 270 இற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும், 2,300 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ளனர்.


சூடானின் இராணுவத் தளபதி அடேல் பற்றா அல் போஹானுக்கும் சூடானின் விரைவு துணைப்படை தளபதி முஹமட் ஹம்டனுக்கும் இடையில் ஏற்பட்ட அதிகார போட்டியே இந்த மோதல்களுக்கான காரணம்.

சூடானில் டாபர் பகுதியில் இடம்பெற்ற இனப்படுகொலையில் இணைந்து பணியாற்றிய இவர்கள் கடந்த 2019 ஆம் ஆண்டு 30 வருடங்கள் ஆட்சியில்

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

## பொருளாதாரத்தில் ஜி–7 நாடுகளை பின்தள்ளும் பிறிக்ஸ் நாடுகள்

உலக பொருளாதார வளர்ச்சியில் ஜி-7 நாடுகளின் பங்களிப்பை பின்தள்ளி பிறிக்ஸ் நாடுகள் முன்னோக்கி நகர்வதாக அமெரிக்காவை தளமாகக் கொண்ட புளூம்பேர்க் நிதி ஆய்வு மையம் கடந்த வியாழக்கிழமை (20) தெரிவித்துள்ளது.



2020 ஆம் ஆண்டின் உலக பொருளாதார வளர்ச்சியில் இரு கூட்டணிகளும் சம அளவில் பங்களிப்பைசெய்துள்ளன. ஆனால்2028 ஆம் ஆண்டில் பிறிக்ஸ் அமைப்பு 35 விகித பங்களிப்பையும், ஜி-7 நாடுகளின் கூட்டணி 27.8 விகித பங்களிப்பையும் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. மேற்குலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி காண்பதே இதற்கான காரணம்.

அனைத்துலக நாணய நிதியத்தின் அண்மைய தரவுகளின் படி பிறிக்ஸ் அமைப்பு 32.1 விகித பங்களிப்பையும், ஜி-7 கூட்டணி 29.9 விகித பங்களிப்பையும்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## அதிக வெப்பத்தால் பாதிப்படையும் இந்தியாவின் பொருளாதாரம்



இந்தியாவில் ஏற்பட்டுவரும் அதிக வெப்பமான காலநிலையினால் அதன் விவசாயம், பொருளாதாரம் மற்றும் சுகாதார துறைகள் கடுமையான பாதிப்புக் களை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக புதிய ஆய்வுத் தகவல் தெரிவித்துள்ளது.

அங்கு ஏற்பட்டுவரும் காலநிலை மாற்றம் காரணமாக வறுமையை ஒழிப்பது, மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது மற்றும் நோய்களை ஒழிப்பது என்ற இந்தியாவின் திட்டம் பின்னடைவை சந்தித்து வருகின்றது.

கடந்த 1992 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவில் ஏற்பட்டுவரும் அதிக வெப்பத்தினால் 24,000 பேர் உயிரிழந்துள்ளனர். வெப்பம் மற்றும் வளி மாசடைதலே இதற்கு முக்கிய காரணம் என கடந்த புதன்கிழமை(19) வெளியிடப்பட்ட கேம்பிறிச் பல்கலைக்கழகத்தின்

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## மக்கள் நெரிசலில் சிக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கைகள் அதிகமாகின்றன

கடந்த புதன்கிழமை (19) இரவு யேமனில் உள்ள பாடசாலையில் இலவச உணவுப் பொருட்களை பெறுவதற்காக கூடிய மக்களிடம் ஏற்பட்ட கூட்ட நெரிசலினால் 80 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லீம் மக்களின் புனித ரம்ழான் மாதத்தில் யேமனில் போராளிகளின்கட்டுப்பாட்டுபகுதியில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

உணவுப்பொருட்களை பெறுவதற்காக கூடிய மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு ஆயுதக் குழுவினர் வானத்தை நோக்கி சுட்டதே இந்த அனர்த்தத்திற்கு காரணம் என உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக கூட்ட நெரிசலில் சிக்கி மக்கள் உயிரிழப்பது அதிகரித்து வருகின்றது. 2015 ஆம் ஆண்டு சவுதி அரேபியாவில் ஹச் பெருநாளை கொண்டாட கூடியவர்களிடம் ஏற்பட்ட நெரிசலினால் 2300 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

கடந்தஆண்டு தென்கொரியாவில் ஹலோவீன் பண்டிகைக்கு கூடிய மக்களிடம் ஏற்பட்ட நெரிசலினால் 150 பேர் வரையிலும் கொல்லப்பட்டிருந்தனர்.

அதற்கு சில வாரங்களுக்கு முன்னர் இந்தோனேசியாவில் உதைபந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற கூட்ட நெரிசலினால் 135 பேர் கொல்லபட்டிருந்தனர். அவர்களில் 40 பேர் சிறுவர்கள்.

2013 ஆம் ஆண்டு இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உள்ள ஆலயத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தில் 115 பேர் உயிரிழந்திருந்தனர்.

## தவறவிடப்பட்ட தடுப்பூசிகள் - நோய் பரவும் ஆபத்து



உலகில்67மில்லியன்குழந்தைகள் வழமையாக போடும் தடுப்பூசிகளை கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் தவறவிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

கோவிட்-19 நோயின் போதான முடக்கமே இதற்கான பிரதான காரணம். கடந்த பல பத்து வருடங்களாக கட்டியமைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தடுப்பூசி செயல்திட்டம் தற்போது பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது என கடந்த புதன்கிழமை (19) வெளியிடப்பட்ட ஐ.நாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக போடும் தடுப்பூசிகளை 48 மில்லியன் சிறுவர்கள் தவறவிட்டுள்ளதுடன், 67 மில்லியன் சிறுவர்களுக்கான தடுப்பூசிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் போலியோ மற்றும் மீசல்ஸ் போன்ற நோய்கள் மீண்டும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1963 ஆம் ஆண்டு மீசல்ஸ் நோய்க்கான தடுப்பு மருந்து பயன்படுத்தப்படுவதற்குமுன்னர்ஆண்டு தோறும் 2.6 மில்லியன் சிறுவர்கள் உயிரிழந்திருந்தனர். ஆனால் அது தற்போது ஒரு இலட்சமாக குறைந்திருந்தது.

தற்போதைய தரவுகளின் அடிப்படையில் ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளேகடுமையாக பாதிப்படைந்துள்ளன. கோவிட்-19 நோயின் பின்னர் தடுப்பு மருந்து மீது மக்களின் நம்பிக்கைகள் குறைந்ததும் அதற்கான காரணம் என ஐ.நா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அவுஸ்திரேலியாவின் கடல்கடந்த தடுப்பு முகாம்களுக்கு பின்னே உள்ள குரூரம்

அவுஸ்திரேலியாவின் கடல்கடந்த தடுப்பு முகாம்கள் செயல்படும் பப்பு நியூ கினியா, நவுரு ஆகிய தீவுகளில் சிறைவைக்கப்பட்டிருந்த அகதிகளின் சாட்சியங்களை மாரிஸ் பிளாக்பர்ன் எனும் சட்ட நிறுவனம் வெளியிட்டுள்ளது.



இந்த சாட்சியங்கள் எப்படி அகதிகள் இழிவுபடுத்தப்பட்டு, மனிதாபிமானமற்ற முறையில், பல ஆண்டுகளாக அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பது வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளன.

அந்த வகையில், ஈரானைச் சேர்ந்த இளம் அகதி ஒருவர் குடும்பத்துடன் நவுருத்தீவில் சிறைவைக்கப்பட்ட சூழலை பகிர்ந்திருக்கிறார். தனது நண்பர்களில் ஒருவர் தற்கொலை செய்துக் கொண்டு இறந்த போது, முகாமின் நிலைமைகளைக் கண்டித்து போராட்டங்களில் ஈடுபட்ட அனுபவத்தை அவர் கூறியிருக்கிறார்.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

## வடக்கு – கிழக்கில் எதிர்வரும் செவ்வாய் கிழமை ஹர்த்தால்– 6 கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

வடக்கு - கிழக்கில் எதிர்வரும் செவ்வாய் கிழமை ஹர்த்தால் அனுஸ்டிக்க 6 கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி , தமிழ் ஈழ விடுதலை இயக்கம் , ஜனநாயக மக்கள் விடுதலை முன்னனி , ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி , தமிழ் தேசியக் கட்சி , ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியவற்றின் தலைவர்களின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் எமது இனத்திற்கு பாதகமான அதன் கடுமையான விளைவுகளை கருத்தில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## வியட்நாமில் இருந்து நாடு கடத்தப்பட்ட இலங்கையர்கள்

வியட்நாம் கடற்பரப்பில் சட்டவிரோதமாக வேறு நாட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது படகு விபத்துக்குள்ளானதில் மீட்கப்பட்ட இலங்கையர்களில் மற்றுமொரு குழுவினர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் 19 ஆம் திகதி 23 பேர் நாட்டை வந்தடைந்துள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

2022 நவம்பரில், 303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற வியட்நாமியக் கொடியுடன் கூடிய பெரிய படகு வியட்நாம் கடற் பரப்பில் விபத்தில் சிக்கியது.

வியட்நாமிய கடலோர பாதுகாப்பு படையினர் விபத்துக்கு உள்ளான இலங்கையர்களை மீட்டு அவர்களில் 151 பேர் டிசம்பரில் திருப்பி அனுப்பியது. இதையடுத்தே தற்போது 23 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட் டுள்ளனர்.

நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்ற கோரிக் கையை வியட்நாமில் அரசிடம் முன்வைத்து தற்கொலை செய்ய முயற்சித்தவர்களில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

# ஈழத்தமிழரின் இறைமை மீட்புக்கு பலதரப்பட்ட ராஜதந்திர தொடர்பு உடன் தேவை

ஈழத்தமிழரின் தேசியப்பிரச்சினை என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தாங்கள் வாழ்ந்து வரும் தாயகத்தில் தங்களுக்கு உள்ள தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையை உறுதிப்படுத்துதலே. பிரித்தானிய அரசு ஈழத்தமிழர்களின் இறைமையின் மீயுயர் பொறுப்பாளராக சோல்பரி அரசியல் அமைப்பின் 29(2) பிரிவின் மூலம் தன்னை முன்னிலைப்படுத்தி மதங்களுக்கோ இனங்களுக்கோ எதிரான சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் பிரித்தானியப் பிரிவிக்கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யலாம் என வரையறை செய்தே தனது 152 ஆண்டுகால காலனித்துவ ஆட்சியில் இருந்து 04.02.1948 இல் சுதந்திரம் வழங்கியது. ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சியில் இணைத்த பொழுது ஈழத்தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட இந்த சோல்பரி அரசியலமைப்புப் பாதுகாப்பை வன்முறைப்படுத்தி 22.05.1972இல் சிறிலங்கா என்னும் ஈழத்தமிழர்களின் விருப்புப் பெறப்படாத சிங்கள பௌத்த குடியரசு ஒன்றை இலங்கைப் பாராளுமன்றத்திற்கு வெளியே நவரங்கலா என்னும் மண்டபத்தில ஈழத்தமிழர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் மூவரைத் தவிர மற்றவர்கள் யாருமே பங்குபற்றாத அரசியல் நிர்ணய சபை மூலம் தன்னிச்சையாக அப்போதையப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரகடனப்படுத்தினார். இதனால் பிரித்தானியர்களிடம் இருந்த ஈழத்தமிழர்களின் இறைமை ஈழத்தமிழர்களிடமே மக்கள் இறைமையாக மீண்டுகொண்டது வரலாறு. அன்று முதல் இன்று வரை கடந்த 51 ஆண்டுகளாக ஈழத்தமிழ் மக்கள் தங்களின் இறைமையின் அடிப்படையில் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே அமைப்பதற்கான தங்களின் பிரிக்கப்பட முடியாத தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தாங்கள் பாதுகாப்பான அமைதியுடனும் வளர்ச்சிகளுடனும் கூடிய ஆட்சியை உருவாக்கித் தங்களின் இறைமையை உறுதிப்படுத்தப் போராடி வருகின்றனர். இதனை தடுப்பதற்கு ஈழத்தமிழர்களின் மேலான இனஅழிப்பு,, இனத்துடைப்பு, பண்பாட்டு இனஅழிப்பு, உட்பட்ட அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான குற்றச் செயல்களையே தனது அரசியல் கொள்கையாகவும் கோட்பாடாகவும் கடந்த ஐம்பத்தொரு ஆண்டுகளாக ஆட்சிப்படுத்தி வருகின்றனர். இதனால் காலனித்துவத்தால் தீர்க்கப்பட இயலாத அனைத்துலக பிரச்சினைகளுள் ஒன்றாகவுள்ள ஈழமக்களின் தேசியப் பிரச்சினை ஐக்கியநாடுகள் சபையின் தன்னாட்சியுரிமையைப் பயன்படுத்த இயலாத எல்லையில் வாழும் மக்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணப் பாராளுமன்றப் பிரதிநிதியுமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் ஈழத்தமிழர்கள் சார்பில் கோரியுள்ள நிலையில் ஈழத்தமிழ் மக்கள் பலதரப்பட்ட ராஜதந்திர முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய காலமாக இன்றைய காலம் அமைகிறது.

இந்நிலையில் ஐக்கியநாடுகள் சபையின் பலதரப்பட்ட தொடர்பாடல் ராஜதந்திரத்தை அமைதிக்குப் பயன்படுத்துவதற்கான அனைத்துலக நாளை 24 ஏப்ரல் கொண்டாடுகின்ற செயலானது ஒருநாட்டுடனோ அல்லது இரண்டு நாட்டுடனோ நில்லாது ஆகக் குறைந்தது மூன்று நாடுகளுடனாவது ராஜதந்திரத் தொடர்புகளை மேற்கொள்ளல் அமைதியைப் பேணுவதற்கு முக்கியம் என்பதை வலியுறுத்துகின்றது. இத்தகைய ராஜதந்திர முயற்சிகளில் ஆலோசனை பெறல், கலந்து பேசுதல், கூட்டொருமைப்பாட்டுடன் செயற்படல் என்பன அமைதியை மீள்விக்க உத்திகளாக உள்ளன. இந்த முயற்சியில் மக்களின் ஆணையில் மண்ணின் உண்மைகளில் சமரசம் செய்யாது உறுதியாக நிலைத்து நின்றபடியே அனைத்துலகின் கருத்துக்கள் நெறிப்படுத்தல்களில் பொதுப்புள்ளியைக் காண்பதன் மூலம் வேலைத்திட்டங்களை உருவாக்கினாலே பிரச்சினைக்கான தீர்வுகளை அடையலாம். எனவே பலதரப்பட்ட தொடர்பாடல் அனைத்துலக முறைமையுடன் கூட்டுறவு கொள்ளுதல் மூலம் பாதிப்புற்றவர்கள் அதிலிருந்து மீளுவதற்கான அமைப்பினையும் உருவாக்க உதவும். எனவே பலதரப்பட்ட தொடர்பாடல் என்பது அனைத்துலக வாழ்வுக்கான அடித்தளம். நாடு என்கிற நிலை ஈழத்தமிழர்களுக்கு இல்லாத நிலை பிரித்தானிய காலனித்துவத்தால் ஒரு தீவுக்குள் இருந்த இரு வேறுபட்ட முடியாட்சிகளான யாழ்ப்பாண-வன்னி தமிழ் அரசுக்களின் இறைமையையும் கண்டி கோட்டே சிங்கள அரசுக்களுடன் இலங்கைத் தேசியம் என்கிற செயற்கையான தேசியத்தின் வழி ஒரே ஆட்சியில் இணைத்ததின் மூலம் 1833 இல் உருவாக்கப்பட்டது. 1948இல் தாங்கள் டச்சுக்காரர் இடம் இருந்து கைப்பற்றிய ஈழத்தமிழர்களின் இறைமையை ஈழத்தமிழரிடம் கையளிக்காது விட்டதன் வழி இன்றைய ஈழத்தமிழர் சிங்களவரின் இனஅழிப்பால் அழிவுறும் நிலை தோற்றம் பெற்றது. 2009இல் ஈழத்தமிழரின் நடைமுறை அரசு சிறிலங்காவின் இனஅழிப்பால் அதன் மக்களுக்கான பாதுகாப்பையும் அமைதியையும் வளர்ச்சிகளையும் முன்னெடுக்க இயலாத நிலை ஏற்பட்ட கடந்த 14 ஆண்டுகளிலும் எவ்வளவு தூரத்துக்கு இனஅழிப்பு எத்தகைய அரசியல் செயற்பாடுகள் மூலம் இன்று வரை தொடர்கிறது என்பதைச் சான்றாதரங்களுடன் வெளிப்படுத்துவதன் மூலம் அதனை ராஜதந்திர முறைகளில் தடுக்கும் அனைத்துலகச் சட்டங்கள் மூலம் நெறிப்படுத்தும் ஐக்கியநாடுகள் சபையின் கடமையை அதற்கு உணர்த்தும் வகையில் பலதரப்பட்ட தொடர்பாடல்களை உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் மேற்கொள்ள ஈழத்தமிழர்களுக்கான மக்களவைகளைக் கட்டமைத்துச் செயற்பட்டாலே ராஜதந்திர முயற்சிகளால் ஈழத்தமிழர்களின் இறைமையை மீளப்பெற உதவமுடியும்.

இவ்விடத்தில் மக்களின் படைப்பாக்க-புத்தாக்க முயற்சிகளை அமைதிக்குப் பயன்படுத்தும் அனைத்துலக நாளை ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 21இல் கொண்டாடி உலகில் வாழும் ஈழத்தமிழர்களை ஈழத்தமிழ் மக்களின் படைப்பாக்க எண்ணங்களைப் பதியும் படைப்பாக்க வங்கி ஒன்றை உருவாக்கவும் அந்த எண்ணங்கள் புத்தாக்கம் பெற்று ஈழத்தமிழ் மக்களுக்கான அமைதி வாழ்வை உறுதிப்படுத்த உதவும் நிதிநிறுவனங்களை சமூக மூலதனமாக உருவாக்கவும் உடன் முயற்சிக்க வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு அவர்களின் நாளாந்த வாழ்வுக்கு இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி அவர்களை நாட்டை விட்டு புலம்பெயர வைக்கும் உள்நோக்குடன் தேசிய பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முன்னையதை விட அதிக சர்வாதிகாரத்தன்மை கொண்டதாகக் கொண்டு வருகின்றனர். இதனால் தமிழர் தாயகத்தில் வாழ இயலாது புலம்பெயர்வோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அவர்களை மண்ணிலேயே வாழவைக்கப் புலம்பெயர் தமிழர்கள் தகுந்த பொருளாதார முன்னெடுப்புக்களை உடன் செய்ய வேண்டும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# ஆக்கிரமிக்கும் சிலைகளும் அழிக்கப்படும் சிலைகளும்





**அகிலன்**

திடீரென வைக்கப்படும் சிலைகள்தான் இலங்கையில் இப்போது பேசுபொருளாகியிருக்கின்றது. சிலைகள் தகர்க்கப்படுவதும் புதிய சிலைகள் இரவோடிரவாக வருவதும் இடம்பெறுகின்றது. மக்கள் அனைவரும் எல்லாவற்றையும் மறந்துபோய் இப்போது சிலைகளுக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். அரசாங்கம் சிங்கள மக்களையும் திசைதிருப்புகின்றது, தமிழ் மக்களையும் திசைதிருப்புகின்றது என்று விமர்சகர் ஒருவர் தெரிவிக்கும் கருத்தையும் புறக்கணிக்க முடியவில்லை.

வவுனியா மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்ட்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கேஸ்வரர் விக்கிரம் சில வாரங்களுக்கு முன்னர் இனந்தெரியாத குழு ஒன்றினால் தகர்க்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு உரிமை கொண்டாடக்கூடியவர்கள் யார் என்பது நீதிமன்ற விசாரணையில் இருக்கும் நிலையிலேயே இந்த விக்கிரம் தகர்க்கப்பட்டிருக்கின்றது. தொல்லியல் பகுதியாக அடையாளம் காணப்பட்ட இந்தப்பகுதியில் புதிய கட்டுமானங்களை அமைப்பதோ அல்லது நீக்குவதோ தடைசெய்யப்பட்டிருந்த நிலையில்தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முல்லைத்தீவில் குருந்தூர்மலைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து வெடுக்குநாறிமலை இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. இவை தொடர்பில் பொலிஸார் மட்டுமன்றி நீதிமன்றமும் மௌனமாகத்தான் இருக்கின்றது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, மற்றொரு வடிவத்தில் அரசாங்கம் முன்னெடுக்கின்றது. முன்னர் படையினர் போரை நேரடியாக முன்னெடுத்தார்கள். இப்போது அரசாங்கத்தின் இயந்திரங்களான திணைக்களங்கள் இந்தப் போரை முன்னெடுக்கின்றன.இதில் தொல்லியல் திணைக்களம் முக்கியமானது.

வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றனவும் குறிப்பிட்ட பகுதிகளை அடையாளம் கண்டு அங்கிருந்து தமிழரை வெளியேற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கின்றன. தொல்லியல் திணைக்களம் முற்றுமுழுதாக சிங்கள புத்திஜீவிகளையே உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதற்கு இரண்டு தமிழ்ப் பேராசிரியர்கள் உள்வாங்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்திருந்த போதிலும், அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை என சம்பந்தப்பட்ட பேராசிரியர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இனவாத அடிப்படையில் தொல்லியல் திணைக்களம் செயற்படவில்லை என்பதைக் காட்டிக்கொள்வதற்கான ஒரு உபாயமாகவே இந்ச் செய்தியை திட்டமிட்ட முறையில் அரசாங்கம் வெளியிட்டதாகக் கருதப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த தீவுப் பகுதிகளை மையப்படுத்தியதாக தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் அண்மைக் காலத்தில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்து. நயினா தீவைப் பொறுத்தவரையில் அதன் பழமையும் பெருமையும் அனைவருக்கும் தெரியும். ஆனால், அங்கு அமைக்கப்பட்ட பௌத்த விகாரையைத்தான் முக்கியமானதாகக் கூகுள் வரைபடத்தில் காட்டிக்கொள்வதற்கான உபாயங்களையும் அரசாங்கம் வகுத்துச்செயற்படுகின்றது. கச்சதீவில் இரகசியமான முறையில் அமைக்கப்பட்ட பாரிய புத்தர் சிலையில் பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது. நெடுந்தீவில் உள்ள வெடியரசன் கோட்டையை சிங்கள பௌத்த அடையாளமாகக் காட்டிக்கொள்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்தப்பின்னணியில் சைவத் தமிழர்கள் இப்போது எதிர்வினையாற்றத் தொடங்கியிருப்பதுதான் அரச தரப்பையும் சிங்கள – பௌத்தமயமாக்கலை முன்னெடுக்கும் திணைக்களங்களையும் சங்கடத்துக்குள்ளாக்கியிருக்கின்றது. அவர்கள் இலக்கு வைக்கும் பல இடங்களில் நடராஜர், சிவன், சிவலிங்கம் என சிலைகள் வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பகுதிகள் தமது ஆளுகைக்குட்பட்டவை என்பதைக் காட்டிக் கொள்வதற்கான ஒரு உபாயமாக இதனை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

அதாவது இருப்பைப் பாதுகாப்பதற்கு இவ்வாறு செய்ய வேண்டியிருக்கின்றது. இதில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியிருப்பது யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நயினை நாகபூசணி அம்மனைப் பிரதிபலிக்கும் சிலை. நயினாதீவு உட்பட அனைத்துத் தீவுகளுக்கும் செல்வதற்கான ஒரே நுழைவாயிலாக இருப்பது பண்ணைப் பகுதிதான்.தீவுப் பகுதிக்குச் செல்பவர்கள் மனதில் நாகபூசணி அம்மன் பதிய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு இந்த சிலை அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது புத்தர் சிலை ஒன்று அங்கு வைக்கப்படலாம் என்பதால், அதனை முந்திக்கொண்ட செயற்பாடாகவும் இருக்கலாம்.

புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் இந்தச் சிலை பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் கம்பீரமாகக் காணப்பட்டபோது, அது இந்தளவுக்கு சர்ச்சையை ஏற்படுத்தும் ஒரு விடயமாக மாறும் என யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். இந்த சிலையை அமைத்தது யார் என்பது இன்று வரை தெரியவில்லை. ஆனால், அது திடீரென அமைக்கப்பட்ட ஒன்றல்ல என்பது அந்தச் சிலையைப் பார்க்கும்போது தெரிகின்றது. மிகவும் நேர்த்தியாக – சிறப்பான சிற்ப வேலைப்பாடுகளுடன் அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சிலை அமைக்கப்பட்ட பின்னர் உருத்திரசேனை என்ற அமைப்பினர் அதற்கு பாலாபிஷேகம் செய்யப்போய் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார்கள். அந்த அமைப்பின் உறுப்பினர்கள் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு மூன்று மணி நேரத்துக்கும் அதிகமாக விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

அந்த சிலையை செய்தது யார் என்பதோ அல்லது அங்கு கொண்டுவந்து வைத்தது யார் என்பதோ தமக்குத் தெரியாது எனத் தெரிவித்த உருத்திரசேனை அமைப்பினர், பாலாபிஷேகத்தை மட்டுமே தாம் செய்ததாகக் கூறியிருக்கின்றார்கள். இந்த சிலையை அகற்றுவதற்காக பொலிஸார் மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை. அதனையடுத்து நீதிமன்ற உத்தரவை அவர்கள் பெற்றார்கள். கடந்த செவ்வாய் கிழமை இந்த வழக்கு யாழ். நீதிமன்றத்துக்கு வந்தபோது, மே மாதம் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கில் இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், என். சிறீகாந்தா உள்பட 15 வரையான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். முறைப்பாட்டாளர் இன்றி பொலிஸார் இந்த வழக்கை தொடுக்க உரிமை இல்லை என்ற கருத்தை சட்டத்தரணி சுமந்திரன் முன்வைத்து வாதத்தை தொடக்கினார்.

தொலைபேசி மூலம் தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகவும் வன்முறைகள் ஏதும் ஏற்படக்கூடாது என்று தெரிவித்தே தாம் வழக்கு

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# ஒரு அரசியல் கைதியின் சிறைப்பட்டறிவு

**இறுதி பகுதி**

**விடுதலையின் பின் இலக்கு ஊடகத்துடன் தனது அனுபவங்களை பகிர்கின்றார்**

**செல்லையா சதீஸ்குமார்**



**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள் மற்றும் அந்த அமைப்புடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்ற குற்றச் சாட்டுகளின் கீழ் இன்றும் பலர் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள். இந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.**

**இந்த நிலையில், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவு வழங்கியதாகக் கூறப்பட்டு, 15 வருடங்கள் சிறையில் இருந்த கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த செல்லையா சதீஸ்குமார் என்ற தமிழ் அரசியல் கைதி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

**தாயகத்தில் போர் வலுப் பெற ஆரம்பித்த நிலையில், இவர் 2008ம் ஆண்டு கைது செய்யப் பட்டிருந்தார்.**

**இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் அவரச நோயாளர் காவு வண்டியின் சாரதியாக இவர் கடமையாற்றியுள்ளார்.**

**இந்த நிலையில், கிளிநொச்சி மருத்து வமனைக்கு அவசரமாக மருந்துகளை எடுத்து வருவதற்காக, மருத்துவமனைக்குச் சொந்தமான வாகனமொன்றை எடுத்துக்கொண்டு செல்லையா சதீஸ்குமார் கொழும்பு நோக்கிப் பயணிக்கும் போது வவுனியா பகுதியில் சோதனையிட்ட அரசப் படைப் பிரிவு, அந்த வாகனத் திலிருந்து வெடிப் பொருட்களை எடுத்ததாக தெரிவித்துள்ளது.**

**இதையடுத்து, செல்லையா சதீஸ்குமார் மீது விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவு வழங்கியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டு களைச் சுமத்தி, அவரைக் கைது செய்தது.**

**இவ்வாறு கைது செய்யப்பட்ட செல்லையா சதீஸ்குமார் மீது சட்ட மாஅதிபர் குற்றப் பத்திரிகை தயார் செய்து, வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.**

**குறித்த வழக்கினை விசாரணை செய்த நீதிமன்றம், 2011ஆம் ஆண்டு, சதீஸ்குமாருக்கு ஆயுட்கால சிறை தண்டனை வழங்கித் தீர்ப்பளித் தது.**

**அதையடுத்து, வழக்கின் தீர்ப்பை ஆட் சேபித்து கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் எதிராளி மேல் முறையீடு செய்திருந்தார்.**

**எனினும், வவுனியா மேல் நீதிமன்றின் தண்டனைத் தீர்ப்பை மேல் முறையீட்டு நீதிமன் றமும் மீளுறுதிப்படுத்தி வழக்கை முடிவுறுத்தியது.**

**இந்நிலையில், பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை பெற்ற சதீஸ்குமார், கடந்த மார்ச் 17ம் திகதி தனது வீட்டை வந்தடைந்தார்.**

**இவ்வாறு 15 வருடங்கள் சிறைக்குள் இருந்த சதீஸ்குமார், தனது விடுதலை, தான் சந்தித்த இன்னல்கள், வரும் காலத்தில் தான் வாழப்போகும் வாழ்க்கை, ஏனைய அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய சிறப்பு செவ்வியின் இறுதி பகுதி.**

**கேள்வி:**

**நீங்கள் சிறையில் இருந்த காலப் பகுதிகளில் உங்கள் மனைவி எவ்வாறான சிக்கல்களை எதிர்கொண்டார், எவ்வாறு அவற்றைக்கடந்து வந்தார் என்று கூற முடியுமா?**

**பதில்-**

ஓம், கணவன், மனைவியுடன் இல்லை என்றால் எங்களுடைய சமூகத்தில பேச்சே வேறு தான். அது கைது செய்யப்பட்டு கணவன் சிறையில் இருந்தாலோ, காணாமல் போயிருந்தாலோ, இல்லை மரணித்திருந்தாலோ சமூகத்தின் பார்வை வேறுதான். ஓர் அனுதாபமோ, அந்தக் குடும்பத்திற்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையும் இருக்காது. எவ்வாறெல்லாம் தவறாக சித்தரிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் துன்பப்படுத்தி போடும் ஒரு பெண்ணை. இந்த சூழலில் எனது மனைவி கடுமையான நெருக் கடிகளையும் வேதனைகளையும் சந்தித்தார். என்னுடைய வழக்கு தொடர்பாக காவல்துறைக்கு நீதி மன்றங்களுக்கு வந்திருந்தாலும், கடுமையான வார்த்தைப்பிரயோகங்களால் தான் அவர்கள் பேசுவார்கள். அத்தோடு அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பான போராட்டங்களில் கலந்து கொண்டாலும் அதன் பின் விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது அவரை மிகவும் பாதித்திருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரையில் எந்த வொரு வழக்கும் ஓரிரு வருடங்களுக்குள் முடிவுக்கு வராது என்று தெரியும். குறைந்தது ஒரு பத்து வருடமாவது எடுக்கும். இந்த காலப்பகுதியில் மனைவியின் தந்தையார் தான் குடும்ப செலவுகளையும் வழக்கு செலவுகளையும் கவனித்து வந்தார். அதனால் நான் ஒரு முடிவு எடுத்தேன். மனைவியையும் மகளையும் இனி நாட்டில் வைத்திருக்க கூடாதென்று. அதனால் என்னுடைய நிலத்தில் பாதியை விற்று விட்டு, மனைவியை இந்தியாவிற்கு அனுப்பி அங்கிருந்து பிரான்சுக்கு சென்றார். அவருக்கு அந்நாட்டு குடியுரிமையும் கிடைத்துவிட்டது. நான்கு வருடத்திற்கு பின் மகளையும் எடுத்துக்கொண்டார். அதுவரையிலும் மகள் மனைவியின் குடும்பத்துடன் இருந்தாள். இப்போது பிரச்சினையில்லை. மகள் அங்கு உயர்தரம் படிக்கிறாள்.

**கேள்வி:**

**சரி, நீங்கள் சிறையில் வழக்கு நடவடிக்கைகளோடு புத்தகங்களையும் எழுதியுள்ளீர்கள், அத்தோடு படித்து பரீட்சைகளையும் எழுதியுள்ளீர்கள் இது குறித்து கூறுங்கள்.**

**பதில்-**

ஒவ்வொரு சிறைச்சாலையும் அதில் உள்ளவர்களின் செயற்பாடு மற்றும் மன நிலைகள் மாறு பட்டிருக்கும் ஒரு சிறைச்சாலையில் உள்ள செயற்பாடுகள் நடைமுறைகள் மற்ற சிறைச்சாலைகளில் இருக்காது. தமிழர்கள் என்றாலே துவேசத்துடன் தான் நடந்து கொள்வார்கள். கெட்டவார்த்தைகள் அதிகம் எம்மை நோக்கி பேசுவார்கள். கடுமையாக நடந்து கொள்வார்கள்.

சில சிறைச்சாலைகளில் சிறை அதிகாரி களுடன் கதைக்க முடியாது. என்னை மகசீன் சிறைச்சாலைக்கு மாற்றிய பின் சூழல் கொஞ்சம் மாற்றம் பெற்றது. சிறை அதிகாரிகளுடன் கதைக்க முடிந்தது. முக்கியமாக அனுராதபுர சிறைச் சாலையை விட மாறுபட்டிருந்தது. கொஞ்சம் நாகரீகமாக நடந்துகொண்டார்கள்.

ஓரளவு புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைத்தது. எழுதுவதற்கும் வசதிகள் கிடைத்தன. எனது வீட்டில் இருந்து வரும் பொருட்களை எடுத்து வைத்து பின் தருவார்கள். நான் அந்த சிறைக்கு செல்லும் போது பலர் இருந்தனர். 1996ம் ஆண்டு கைது செய்யப்பட்டவர்கள் கூட இருந்தார்கள். இந்த சூழலில் நான் கவிதைகள், கதைகள் எழுத ஆரம்பித்தேன். நிறைய எழுதியுள்ளேன். ஆனால் சிறைக்குள் கலவரங்கள் வரும் போது அவை எரிக்கப்பட்டு விடும். அதே போல் சிறை அதிகாரிகளால் சோதனைக்குள்ளாக்கப்படும் போதும் நான் எழுதி வைத்திருந்த நிறைய என்னுடைய எழுத்துக்கள் அழிக்கப்பட்டு விட்டன.

இதையடுத்து சிறையில் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒருமுறை என சில மாற்றங்களைக்கொண்டு வந்தார்கள். அதன்போதுதான் 2012ம் ஆண்டு முதல் புத்தகம் எழுதினேன். அதைத் தொடர்ந்து ஆறு புத்தகங்களை எழுதினேன்.

**கேள்வி:**

**இன்னும் எத்தனை பேர் விடுதலைக் காக காத்திருக்கின்றனர்?**

**பதில்-**

என்னுடைய விடுதலைக்குப் பின் தமிழ் அரசியல் கைதிகள் என்ற தலைப்புக்குக் கீழ் மொத்தம் 24 கைதிகள் இருக்கின்றனர். இவர்களை இரண்டாகப்பிரிக்கலாம்.

அதில் பத்துக் கைதிகள் நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட்ட தண்டனைக்கைதிகள். அதிலும் இரண்டாகப்பிரித்தால் அதில் உள்ளவர்களில் இருவர் மரணதண்டனைக்கைதிகள். ஏழு பேர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள். ஒரு வருக்கு இரு நூறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மிகுதி 14 பேர் உள்ளனர். அவர்களை நாம் விளக்கமறியல் சந்தேக நபர்கள் என்று கூறுவோம். அவர்களுக்கு எதிராக மேல் நீதி மன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டு வழக்கு விசாரணைக்கு முகம் கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர். அவர்களின் வழக்கு விசாரணையையடுத்து நீதி மன்றத்தால் விடுவிக்கவும் முடியும் தண்டிக்கவும் முடியும்.

இந்த தரப்புக்கும், நல்லிணக்கம் என்று பேசப்படுகின்ற, அதாவது 'மறப்போம் மன்னிப் போம்' என்ற வகையில், யுத்தம் முடிந்து 14 ஆண்டு கள் முடிந்துவிட்டன என்று பேசப்படுகின்ற காலத்தில் அவர்களும் சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்ற காலத்தில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் நிலை குறித்து சிந்திக்க வேண்டும்

மட்டு.நகரான்

வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கண்ணீரும் அவர்களின் எண்ணங்களும் இன்று விடைகாணாத ஒரு விடயமாகவேயிருந்துவருகின்றது. இன்று வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்கு அப்பால் அவர்களின் வாழ்க்கை எவ்வாறு செல்கின்றது,அவர்களின் இன்றைய நிலை என்ன என்பதையும் அறியவேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது.

வடகிழக்கு மாகாணத்தில் காணாமல்ஆக்கப்பட்ட உறவுகளுக்கு அப்பால் தெற்கிலும் அதிகளவோனோர் வெள்ளைவான் கடத்தல்களினால் தமது உறவுகளை இழந்து இன்றும் தேடிவரும் நிலைமையினை காணமுடிகின்றது.

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு வருகைதந்த கடத்தப்பட்டு காணாமல்போன சிரேஸ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலியகொட அவர்களின் மனைவி சந்தியா எக்னலியகொட கலந்துகொண்டு பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக வடகிழக்கில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராடிவரும் நிலையில் அதன் வலிகள் உணரப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்ற கோரிக்கையினை சந்தியாக எக்னலிகொட விடுத்துள்ளார்.

வடக்கு கிழக்கில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் என்பது அவர்களின் வலிகளை உணர்ந்து முன்னெடுக்கும் அவர்களின் போராட்டம் இன்று எந்த நிலையில் உள்ளது என்பதை பின்நோக்கிபார்க்கவேண்டிய தேவையுள்ளது.

கொத்துக்கொத்தாக தமது கைகளினால் உறவுகளை படைகளிடம் ஒப்படைத்துவிட்டு வீதியோரங்களில் தமது பிள்ளைகளை தேடிவரும் உறவுகளை இன்று தமிழ் தேசிய பரப்பில் செயற்படுவோர் தமது வியாபாரங்களுக்கே பயன்படுத்தும் நிலைமையினை காணமுடிகின்றது.

உண்மையில் வலியும் வேதனையும் தனக்கு தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். அவர்களின் வேதனையென்பது பல வகையிலுமிருந்துவருகின்றது.வெறுமனே நாங்கள் அவர்களுக்கு நீதியை மட்டுமே பெற்றுக்கொடுக்க முனைகின்றோமே தவிர அவர்களுக்கான வாழ்க்கையினைப்பெற்றுக்கொடுப்பதற்கு யாரும் முயற்சிகளை முன்னெடுக்கவில்லையென்பது இன்றும் கவலைக்குரிய விடயமாகவேயுள்ளது.

இன்று சர்வதேச ரீதியில் தமிழர்களின் நியாயமான கோரிக்கை ஓங்கியொலிப்பதற்கு முக்கிய காரணமாகயிருப்பது இந்த வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்தான்.அவர்களின் கண்ணீருடனான கோரிக்கையே இன்று ஐநாகதவினை பலமாக தட்டிநிற்கின்றது.

தமிழர்களின் விடுதலைப்போராட்டம் மௌனிக்கப்பட்ட காலம் தொடக்கம் பல்வேறு கஸ்டங்களையும் தாங்கியவாறு தமது உறவுகளை தேடிவருவதுடன் தமிழர்களுக்கான நிரந்தர தீர்வினையும் இந்த உறவுகள் வலியுறுத்திவரும் நிலையில் அவருக்கு ஆதரவாகவும் அவர்களை தேவையினையும் நிறைவேற்றவேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் அனைத்து தமிழ் தேசியவாதிகளுக்கும் உள்ளது.

சிரேஸ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலியகொட அவர்களின் மனைவி சந்தியா எக்னலியகொட அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பகுதிக்கு வருகைதந்து அங்கு தனது கணவனை கடத்தி கொலைசெய்தவர்களுக்கு கடவுள் தண்டனை வழங்கவேண்டும் என்ற வகையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த போராட்டத்திற்கு அம்பாறை மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவும் ஆதரவு தெரிவித்திருந்த அதேநேரம் சிரேஸ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலியகொட அவர்களின் மனைவி சந்தியா எக்னலியகொடவுக்கு பல்வேறு பெண்கள் அமைப்புகளை சார்ந்தவர்கள் அன்று ஆதரவு தெரிவித்து கலந்துகொண்டதை காணமுடிந்தது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் பல ஆதங்கங்களை வெளிப்படுத்தினார்கள்.தாங்கள் மாதம் ஒரு முறை எமது உறவுகளுக்கு நீதிவேண்டி போராட்டங்கள் நடத்தும்போது எந்த பொது அமைப்புகளோ அரசியல்வாதிகளோ தமக்கு ஆதரவு வழங்குவதில்லையெனவும் பல உறவுகள் மிகவும் வறுமை நிலையில் வாடுவதாகவும் அவர்களுக்கான உதவிகளைக்கூட வழங்க யாரும் முன்வருவதில்லையெனவும் மிகவும் கவலையுடன் தெரிவித்தனர்.

எங்களது உறவுகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்குடன் தொடர்ந்து இவ்வாறான போராட்டங்களில் ஈடுபட்டுவருவதன் காரணமாக பிள்ளைகளைக்கூட கவனிக்கமுடியாத நிலை காணப்படுவதுடன் முறையான தொழிலுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்துவருவதாகவும் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிக்கின்றனர்.

என்னதான் நாங்கள் அவர்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்க போராடினாலும் அன்றாடம் அவர்களின் வாழ்க்கையில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வினைப்பெற்றுக்கொடுக்க வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் சுமார் 6000க்கும் அதிகமான வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவுகள் உள்ளனர்.

1990ஆம் ஆண்டு தொடக்கம் தமது உறவுகளை தேடிவரும் இவர்களில் பலர் மறைந்த போதிலும் அவர்களின் உறவுகளும் தமது உறவினை தேடிவரும் நிலை காணப்படுகின்றது. சிலர் அதனை மறந்து தமது வாழ்க்கையினை முன்கொண்டுசெல்கின்றபோதிலும் பலர் இன்னும் தமது உறவுகளை தேடிவருகின்றனர். அதிலும் யுத்தம் மௌனிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் கடத்திச்செல்லப்பட்ட சுமார் 800க்கும் அதிகமானோரை உறவுகள் தேடிவரும் நிலைமையே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்வதற்கான எந்த அமைப்புகளும் முன்வருவதில்லை.தமிழ் தேசியம் சார்ந்து தொழிற்படும் அரசியல் கட்சிகள் தமது அரசியல் நோக்கங்களைஅடிப்படையாககொண்டுமட்டுமே செயற்படுகின்றது.

இதேபோல் இங்கு செயற்படும் சிவில் அமைப்புகள் எங்காவது தமிழ் தேசியம் சார்ந்தவர்களிடம் நிதியைப்பெற்று ஏதாவது போராட்டத்தினை நடத்திக் காட்டிவிட்டு நிதியை சுருட்டுவதிலேயே குறியாகயிருக்கின்றது.கிழக்கில் செயற்படும் எந்த தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் வறுமை நிலையில் இல்லை.வறுமை நிலையிலிருந்தாலும் தமிழ்தேசிய பரப்பிற்குள்வந்து போராட்டங்களை நடாத்தி தம்மை பொருளாதார ரீதியாக உயர்த்துவதிலேயே குறியாகயிருக்கின்றனர்.

ஆனால் தொடர்ச்சியாக தமது உறவுகளை தேடி போராடிவரும்உறவுகள்இன்றும்வறுமையில் வாடும் நிலைமையினையே காணமுடிகின்றது. இதன்காரணமாக இங்கு செயற்படும் சிவில் சமூக அமைப்புகளும் அரசார்பற்ற அமைப்புகளும் சிறு உதவிகளை காட்டி அவர்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தும் நிலைமையே இருந்துவருகின்றது.

இவ்வாறான நிலைமைகள் மாற்றமடையவேண்டும். வலிந்துகாணாமல்ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொருளாதார ரீதியாக வளப்படுத்தப்படவேண்டும்.அவர்களின் நீதிகோரிய கோரிக்கை நிறைவேற்றப்படவேண்டுமானால் போராட்டம் வலுப்பெறவேண்டும்.போராட்டம் வலுப்பெற வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியாக வலுப்பெறவேண்டிய அவசியம் இருக்கின்றது.

வெறுமனே போராட்ட இயந்திரமாக மட்டும் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நோக்கப்படுவார்களானால் எதிர்காலத்தில் வடகிழக்கில் போராட்டங்கள் அனைத்தும் மழுங்கடிக்கப்பட்டு தமிழர்கள் மத்தியில் போராடும் உணர்வு இல்லாமல்போகும் நிலைமையும் உருவாகலாம்.எனவே அனைவரும் சிந்தித்து செயற்படவேண்டிய மிக முக்கிய காலத்தில் நாங்கள் நின்றுகொண்டிருக்கின்றோம். இன்றைய பொருளாதார நெருக்கடியினால் மிகவும் கஸ்டங்களை எதிர்கொள்ளும் அவர்களின் நிலைமை மாற்றமடைய வேண்டும்.இதற்கு அனைவரும் ஒன்றிணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்

• • •

# பெருந்தோட்ட காணி அபகரிப்பு

துரைசாமி நடராஜா

இலங்கையின் தேயிலைப் பெருந்தோட்டங்கள் அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருப்பதாக விமர்சனங்கள் பலவும் இருந்து வருகின்றன.இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லாத நிலையில் பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் படிப்படியாக வெளியாரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நிலை மற்றும் இதனால் ஏற்படும் பாதக விளைவுகள் என்பன தொடர்பிலும் பலர் தமது விசனப்பார்வையை செலுத்தியுள்ளனர். இதனடிப்படையில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் மலையகத்தின் நமுனகுல, இந்தகல தோட்டத்தின் காணி வெளியாரினால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் அபாய நிலை குறித்து அண்மையில் சுட்டிக்காட்டி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்..

இலங்கையின் தேசிய வருமானத்தில் தேயிலையின் ஆதிக்கம் தொடர்ச்சியாகவே வலுவானதாக இருந்து வந்துள்ளது.இது ஒரு சிறப்பம்சமாகும்.இதற்கேற்ப நாம் நோக்குகையில்1959 ம் ஆண்டில் இலங்கையின் அந்நியச் செலாவணி உழைப்பில் தேயிலையின் பங்களிப்பு 59.6 வீதமாக இருந்தது.இது 1969 இல் 57.8, 1976 இல் 43.6, 1978 இல் 48.5, 1982 இல் 29.6, 1986 இல் 27.2, 1987 இல் 25.9, 1989 இல் 24.3, 1990 இல் 24.9 வீதமாகக் காணப்பட்டது.இலங்கை ஏற்றுமதி செய்யும் புடவைக் தொழிலுக்கான மூலப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணி, பெற்றோலிய ஏற்றுமதிகள் இரண்டையும் கழித்து விட்டுப் பார்த்தால்,1989 இல் மொத்த ஏற்றுமதிப் பெறுமதி 43,772 மில்லியன் ரூபாவாகும்.இந்த ஆண்டில் மொத்த தேயிலை ஏற்றுமதி மூலம் 13,644 மில்லியன் ரூபாய்கள் பெறப்பட்டன.இது ஏற்றுமதியில் 31 வீதமாகும்.எனவே தேயிலையே தனி ஒரு ஏற்றுமதிப் பொருளாக பலகாலம் முக்கியத்துவம் பெற்று விளங்கிய நிலையில் உண்மை வருவாய் தேயிலையின் மூலமாகவே முதன்மையாகப் பெறப்பட்டுள்ளது என்பதனை புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர்.இதில் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் வகிபாகமும் கணிசமானது என்பதனை மறுப்பதற்கில்லை.இதேவேளை தேயிலை உற்பத்தியைப் பொறுத்தவரையில் 1945 இல் 125.6 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி இங்கு இடம்பெற்றது.இது 1960 இல் 197.5, 1976 இல்196.6, 1982 இல்187.8, 1990 இல்233.0 மில்லியன் கிலோ கிராமாக அமைந்திருந்தது.இதேவேளை 1995 இல் இலங்கையின் பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தியினை நோக்கும்போது அது 168.8 மில்லியன் கிலோ கிராமாக காணப்பட்டது. இவ்வுற்பத்தியானது 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104.0 மில்லியன் கிலோ கிராமாக அமைந்திருந்தது. எனினும் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சி கண்ட நிலையில் சிறு தோட்டங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றமைக்கு அரசாங்கத்தின் பெருந்தோட்டம் குறித்த ஓரவஞ்சனையே முக்கிய காரணமாகும்.இதனிடையே பெருந்தோட்டங்களை தொடர்ந்தும் மழுங்கடித்து சிறு தோட்டங்களை கையுயர்த்தி விடும் அரசாங்கத்தின் கபட செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளிப்பாடுகள் அதிகமாகவே இருந்து வருகின்றன.

இதேவேளை இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் விளைநிலங்களின் பரப்பளவு தொடர்பில் நாம் நோக்குகின்றபோது, 1985 இல் 231,650 ஹெக்டேயர் பரப்பில் தேயிலை பயிர்ச்செய்கை இடம்பெற்றது.1972 ம் ஆண்டு நாட்டின் காணி வரலாற்றைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான வருடமாகும்.இவ்வாண்டில் காணி உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட நிலையில் இலங்கையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் உடைமைகளுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது.இதன்படி நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 10 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியுடைமைகளும், பெருந்தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 20 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியார் உடைமைகளும் நிலச்சீர்திருத்த ஆணைக் குழுவினால் சுவீகரிக்கப்பட்டன.1972 ம் ஆண்டு காணிச் சீர்திருத்த நடவடிக்கையின் போது பெருந்தோட்டக் காணிகளில் சிறியளவான பகுதியினையே சுவீகரிக்க முடிந்த நிலையில் 1975 இல் காணிச் சீர்திருத்த நடவடிக்கையின் போதே பெரும்பகுதியிலான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டன.1972 ம் ஆண்டு முதல் 1975 ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 169,208 ஹெக்டேயர் தேயிலைத் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டன. ஏனையவை சிற்றுடைமையாக்கப்பட்டமையும் தெரிந்ததேயாகும். 1977 இல் ஆட்சிபீடமேறிய அரசாங்கம் பெருந்தோட்டக் காணிகளின் நிர்வாக அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழ் பெருந்தோட்டக் காணிகளைக் கொண்டு வந்தது.பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டபோதும் அதன் நன்மைகளைத் தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.பெருந்தோட்டக் காணிகள் நிலமற்ற பெரும்பான்மை கிராமத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.இந்திய வம்சாவளியினர் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை இல்லாதிருந்த நிலையானது அவர்கள் நிலவுடைமைச் சமூகமாக மேலெழும்புவது உள்ளிட்ட பல விடயங்களுக்கும் தடைக்கல்லாக இருந்தது என்பதையும் கூறியாக வேண்டும்.1980 இல் பயனற்ற தேயிலைக் காணிகள் என்ற ரீதியில் சுமார் பத்தாயிரம் ஹெக்டேயர் காணிகள் இலங்கையின் முக்கிய இடங்களான கம்பளை, கண்டி, உலப்பனை, கடுகண்ணாவை, போன்ற பகுதிகளில் இனங்காணப்பட்டன. இந்நிலங்களில் மாற்றுப்பயிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தேசித்திருந்த நிலையில் உலக வங்கியும் இதற்கு அனுசரணையாக இருந்தது.எனினும் இக்காணிகள் பின்னர் காணியற்ற கிராமிய மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டமையை அவதானிக்க முடிந்தது.

### இனவாத பின்புலம்

பெருந்தோட்ட தேயிலைக் காணிகள் பல சந்தர்ப்பங்களில் அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்பட்டமை வரலாறாகும். எனினும் இச்சுவீகரிப்பின் பின்புலமானது இனவாதத்தை மையப்படுத்தியது என்றவாறு விமர்சனங்கள் பலவும் முன்வைக்கப்பட்டன.இந்திய வம்சாவளி மக்களின் செறிவை பலவீனப்படுத்தி, அவர்களின் இருப்பு அடையாளம் என்பவற்றை கேள்விக் குறியாக்குவதே இனவாதிகளின் முக்கிய நோக்கமாகுமென்று கண்டனங்கள் மேலெழுந்தன.எது எப்படியான போதும் பெருந்தோட்ட காணிச் சுவீகரிப்பு என்பது அம்மக்களின் அபிவிருத்தியில் பல்வேறு தாக்கவிளைவுகளையும் ஏற்படுத்தி இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.தொழிலாளர்களின் வேலை நாள் பாதிப்பு, வருமான வீழ்ச்சி, அரசியல் பிரதிநிதித்துவ ரீதியான தாக்கங்கள் எனப்பலவற்றுக்கும் காணிச் சுவீகரிப்பு உந்துசக்தியாக அமைந்தது.அத்தோடு சில இடங்களில் பெருந்தோட்ட தேயிலைக் காணிகளை பெரும்பான்மை கிராமத்தவர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில், வேண்டுமென்றே இக்காணிகள் பற்றைக் காடுகளாக்கப்பட்டு வருவதாகவும் புகார்கள் மேலெழுந்து வருகின்றன.இந்நிலையில் கடந்த கால மற்றும் சமகால வரலாறுகளை நோக்குகையில் பெரும்பாலான விடயங்களில் கிராமத்தினரை திருப்திப்படுத்த முனையும் அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களை ஒரு பொருட்டாகக் கொள்வதே இல்லை என்பது கசப்பான உண்மையாகும்.

இது ஒரு புறமிருக்க பெருந்தோட்டக் காணிகளை வெளியார் ஆக்கிரமிக்கும் முயற்சி தொடர்பாக நீண்ட காலமாகவே குற்றச்சாட்டுகள் இருந்து வருகின்றன.இந் நடவடிக்கையை கண்டித்த தொழிலாளர்கள் பல இடங்களில் கிளர்ந்தெழுந்துள்ள சம்பவங்களும் அடிக்கடி நடந்தேறியுள்ளன.அரசியல் தொழிற்சங்கவாதிகளும் தொழிலாளர்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர். பெருந்தோட்டக் காணிகளை வெளியார் ஆக்கிரமிக்கும் நிகழ்வு அண்மையில் பதுளை, நமுனுகுல,, இந்தகல பிரதேசத்திலும் இடம் பெற்றுள்ளது.இந்தகல தோட்டத்திற்குரிய 50 ஏக்கர் காணியை வெளியார் ஆக்கிரமிப்பு செய்திருந்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தனது கண்டனத்தை அண்மையில் தெரிவித்திருந்தார்.இது தொடர்பில் தோட்ட நிர்வாகம் மௌனமாக இருப்பதற்கான காரணம் மற்றும் அதன் பின்னணி என்னவென்பது தொடர்பில் மக்கள் பதற்றமடைந்துள்ளதாகவும், இதற்கான உடனடி நடவடிக்கையை நிர்வாகம் மேற்கொள்ளாவிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு காண முனையும் என்றும் வடிவேல் சுரேஷ் காரசாரமாக தெரிவித்திருந்தார்.

பெருந்தோட்டப்புற காணிகளை வெளியார் ஆக்கிரமிக்கும் செயலானது தொழிலாளர்களிடையே பல்வேறு அதிருப்திகளையும் தோற்றுவித்துள்ளது. தோட்டங்களில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகிவரும் நிலையில் இதனால் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளது.தோட்டப் புறங்களில் பொலிஸ் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றமை தொடர்பில் தொழிலாளர்கள் ஏற்கனவே அச்சமடைந்துள்ளனர்.இந்நிலையில் வெளியாரின் தோட்டப் புற ஊடுருவல் சம்பவங்கள் தோட்டங்களின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதோடு பாதுகாப்பு தரப்பினரின் தோட்டப்புற ஊடுருவலுக்கும் அது வாய்ப்பினை ஏற்படுத்துவதாகவே அமையும்.மேலும் கலாசார ரீதியான பாதிப்புக்களுக்கும் வெளியாரின் ஊடுருவல் வழிவகுக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

காணி மற்றும் வீடு என்பன உரிமை பெற்ற சமூகமாக ஒரு சமூகம் மேலெழும்புகையில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்



# மேலதிக வாயுவை எரித்தழிக்கும் நடவடிக்கையும் புற்றுநோயும்

பகுதி 01

தமிழில்: ஜெயந்திரன்

ஈராக்கின் ஏர்பில் (Erbil) நகரில் கவகொஸ்க் (Kawergosk) முகாமில் வாழுகின்ற ஆயிரக் கணக்கான சிரிய அகதிகளில் ஒருவரான 53 வயது நிரம்பிய ஷெரீனுக்கு (Shireen) 2020 மார்ச் மாதத்திலிருந்து புற்றுநோய்க்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கின.

"ஆரம்பத்தில், எனது முதுகு, மார்பகம், கை போன்ற அவயவங்களில் வேதனையை அனுபவிக்கத் தொடங்கினேன். இப்படிப்பட்ட வலி தசைநார்களில் ஏற்படும் பிடிப்புகளினால் அல்லது ஏதாவது ஒரு நோய்த்தொற்றினால் ஏற்படுகின்றது என்று எண்ணி, இந்த நோவுகள் பற்றி நான் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை" என்று அவர் கூறினார்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கான சிகிச்சையை முகாமில் உள்ள சுகாதார மையத்தில் மட்டுமே அவரால் பெற முடிந்தது. அங்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சிகிச்சை கள் வழங்கப்பட்டுவந்தன. அந்நேரத்தில் நிலவிய கோவிட் பெருந்தொற்றின் காரணமாக முகாமை விட்டு அவரால் வெளியே செல்ல முடியவில்லை. அவருக்கு எந்தவொரு தொழிலும் இல்லாத காரணத்தினால், சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளை அவரால் நாட முடியவில்லை.

கடைசியாக, 2020ம் ஆண்டின் கோடை காலத்தில் ஏர்பில் நகரத்தில் உள்ள பெரிய மருத்துவமனை ஒன்றில் ஒரு மருத்துவரைச் சந்திக் கும் வாய்ப்பு ஷெரீனுக்குக் கிட்டியது. அங்கு தான் முதன் முதலாக மார்பகப் புற்றுநோயால் அவர் பாதிக்கப்பட்டிருப்பதாக அவருக்குச் சொல்லப் பட்டது.

எனது முலைக்காம்பிலிருந்து இரத்தம் சொட்டத்தொடங்கியதன் காரணமாக உடனடியாக காத்திரமான ஒரு மருத்துவ பரிசோதனையைச் செய்யவேண்டியஅவசியம்எனக்குஏற்பட்டது. சில நாட்களுக்குப்பின்னர்அவருக்குஅறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதுடன், புற்றுநோய்க்கான மருந்துச் சிகிச்சையும் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வாறான சிகிச்சைகளை அவர் பெற்றிருந்தாலும் கூட, உடலில் அவர் அனுபவிக்கும் நோவு தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

இவ்விடயத்தில் ஷெரீன் தனியாக இல்லை. கவர்கொஸ்க் முகாமில் அவரது பிரிவில் உள்ள இன்னும் ஒன்பது பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வட ஈராக்கின் குர்திஷ் மக்கள் வாழும் பிரதேசத்தில் பணிபுரியும் மருத்துவர்களும், அங்கு வாழும் மக்களும் அங்குள்ள பெற்றோலிய நிறு வனங்கள் மேற்கொள்ளும் ஒரு செயற்பாடே இவ்வாறு அங்கு புற்றுநோய் அதிகமாக ஏற் படுவதற்குக் காரணம் என நம்புகின்றனர். அந்த முகாமுக்கு அருகாமையில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றில் பெற்றோலியம் உற்பத்தி செய்யப்படும் பொழுது, அங்கு உரு வாகும் மேலதிக வாயு எரிக்கப்பட்டு (gas flaring) வளிமண்டலத்துக்குள் விடப்படுகிறது. இவ்வாறான ஒரு செயற்பாடு தான் அங்கு வாழும் மக்களிடையே புற்றுநோய் பரவுவதற்கு அடிப்படைக்காரணம் என்று அங்கு வாழும் புத்திஜீவிகளும் மக்களும் நம்புகின்றனர். ஈராக்கில் தனியாரால் நடத்தப்படும் சக்தியை வழங்கும் பெருநிறுவனமான கார் (KAR) என்ற நிறுவனத்துக்குச் சொந்தமானதே அந்த சுத்திகரிப்பு நிலையம் ஆகும். இவ்விடயம் தொடர்பாக கார் என்று நிறுவனத்திடம் வினவப்பட்டபோது, அந்த நிறுவனத்தைச் சேர்ந்த யாரும் பதில்தர முன்வரவில்லை.

2013ம் ஆண்டுக்கும் 2019ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், ஏர்பில் டியூஹொக் ஆகிய நகரங்களில் புற்றுநோயால் பாதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை இரட்டிப்பானதாக, புற்றுநோயைத் தடுப்பதற்கான ஆசிய பசிபிக் அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு (Asian Pacific Journal of Cancer Prevention), செய்தி வெளியிட்டது. ஐஎஸ் பிரிவுடனான போர் ஒரு முடிவுக்கு வந்த பின்னர் அப்பிரதேசத்தில் எண்ணெய் உற்பத்தி அக்காலப் பகுதியில் ஆரம் பிக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சுவாசக் கோளாறுகளில் தொடங்கி புற்று நோய் வரையான பல்வேறு கோளாறுகள் தமக்கு இருப்பதாக அங்கு வாழும் மக்களில் பலர் எம்மிடம் தெரிவித்தனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் ஷெரீனுடைய வாழ்க்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. "எமது சொந்தக் கிராமத்தில் எமது வாழ்க்கை மிகவும் சந்தோசமானதாக அமைந்திருந்தது. அதற்குக் காரணம் நாங்கள் மிகவும் இயற்கையான, சேதன உணவுகளையே உண்டு வந்தோம். அங்கு வாழ்ந்த போது, எமது வாழ்க்கையும் எமது உளநிலையும் நன்றாகத் தான் இருந்தன" என்று சிரியாவில் கஹத்தன்யா (Qahtaniyah) என்ற பிரதேசத்தில் உள்ள ஷெயீர் (Sheir) என்ற கிராமத்து வாழ்க்கையைப் பற்றிக் கூறும்போது அவர் குறிப்பிட்டார்.

2013ம் ஆண்டு ஐஎஸ்ஐஎல் (ISIL) போராளிகள் அந்தக் கிராமத்தைத் தாக்கினார்கள். அந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஷெரீனும் அக்கிராமத்தவர்களும், அக்கிராமத்தையும் தமது கால்நடைகள் வயல்கள் என்பவற்றையும் கைவிட்டுவிட்டு, தமது நாட்டு எல்லையைக் கடந்து ஈராக்கினுள் நுழைந்தார்கள்.

### இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கம்

1991 – 2003 ஆகிய ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்ற வளைகுடாப் போர்களின் போது, 1200 தொன்கள் அளவிலான வெடிபொருட்கள் ஈராக்கின்மேல் போடப்பட்டன. இதன் காரணமாக அங்குள்ள மக்களுக்கு ஏற்படும் புற்றுநோய்க்கு, உண்மையில் பெற்றோலிய எரிவாயு தான் காரணமா அல்லது குண்டுவீச்சுகளின் காரணமாக வெளிப்பட்ட யுரேனியத்திலிருந்து ஏற்பட்ட கதிர்வீச்சுத் தான் காரணமா என்பதைக் கண்டறிவது கடினமானதாக இருக்கிறது.

இது எப்படி இருப்பினும் கவர்கொஸ்க் அகதிகள் முகாமில் வாழுகின்ற 8000 அகதிகளும் பெற்றோலிய வாயு எரிக்கப்படுவதன் காரணமாக வெளியேறும் பென்ஷீன் (benzene) போன்ற இரசாயனப் பதார்த்தங்களின் தாக்கத்துக்கு உள்ளா வது தொடர்பாக நிபுணர்கள் மிக அதிகமான கவலையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

"பெற்றோலிய எரிவாயுவிலிருந்து வெளிப்படும் பென்ஷீன் குருதிப்புற்றுநோயை (leukaemia) ஏற்படுத்தக்கூடிய இரசாயனக் கதிர்வீச்சுப் பதார்த்தங்களைத் தன்னில் (carcinogen) கொண்டிருக்கிறது" என்று அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலஸ் நகரத்திலுள்ள கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத்தின் பொதுச்சுகாதாரக் கற்கைப் பிரிவுக்கு பொறுப்பாக இருக்கின்ற லோறா குஷிங் (Laura Kushing) தெரிவித்தார். "அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் இவ்வாறான இரசாயனப் பதார்த்தங்களினால் பாதிப்புக்கு உள்ளாவது தொடர்பாக மிகவும் கவலையடைகிறேன்" என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

"தங்கள் மேலதிக வாயுவை எரிக்கின்ற நடைமுறையைப் பின்பற்றுகின்ற எண்ணெய்க் கிணறுகளுக்கும் இயற்கை வாயுவை உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கும் அண்மையில் குடியிருக்கின்ற கர்ப்பிணிப் பெண்கள் ஏனைய சாதாரண சூழ்நிலையில் வாழுகின்ற கர்ப்பிணிப் பெண்களுடன் ஒப்பிடும் போது, 50 வீதம் அதிகமாக குறைமாதப் பிள்ளைகளைப் பெறுவது அவதானிக்கப்பட்டிருக்கிறது" என்று மேற்படி பல்கலைக்கழகத்தில் குஷிங் தலைமையில் மேற் கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின் முடிவு சுட்டிக்காட் டுகிறது.

"தமது கர்ப்பிணிக் காலத்தில் பத்து அல்லது அதற்கு அதிகமான தடவைகள் எரிந்துகொண்டிருக்கும் வாயுவின் தாக்கத் துக்கு உள்ளானவர்களைப் பொறுத்த வரையில், 50 வீதம் அதிகமாக குறை மாதப் பிள்ளைகள் பெறுபவர்களாக இருந்தார்கள். அதாவது 37 வாரங் களுக்கு குறைவான காலத்தைக் கொண்டிருந்தார்கள்" என்று குஷிங் மேலும் தெரிவித்தார். "குழந்தைகள் உரிய காலத்துக்கு முன்னர் பிறக்கும் போது, அவர்களது ஆரோக்கியத்தில் அது பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது."

இந்த எரிவாயுவின் தாக்கத்துக்கு நீண்ட காலம் முகம் கொடுப்பவர்களுக்கு, எலும்பு மச்சை (bone marrow) பாதிப்புக்கு உள்ளாகின்றது. அவ்வாறான பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு, குருதியில் செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கை குறைவதன் காரணமாக, அவர்கள் பலவீனமாகவும் களைப்பாகவும் இருப்பார்கள். இவ்வாறானவர்களுக்கு உடலில் அதிக உரசல் காயங்கள் ஏற்படுவதுடன் இரத்தம் அதிகமாக வெளியேறுவதுடன் அந்நோயிலிருந்து குணமாவதற்கும் அதிக காலம் எடுக்கிறது.

தென் கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத் தின் கெக் மருத்துவக் கல்லூரி (Keck School of Medicine), லொஸ் ஏஞ்சலசின் கலிபோர்ணியாப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகளுடன் இணைந்துமேற்கொண்ட ஆய்வும் "தம்மிடம் மேலதிகமாக உள்ள வாயுவை எரிக்கும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துகின்ற எண்ணெய்க்கிணறுகள் மற்றும் இயற்கை வாயு தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அருகிலே வாழும் பெண்களுக்கு 50 வீதம் அதிகமாகக் குறைமாதப் பிள்ளைகளைப் பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்றது" என்று தெரிவித்தது.

இவ்விடயத்தைப் பார்க்கும் போது, புற்றுநோயும் குறைமாதப் பிறப்பு மட்டும் இங்கே பிரச்சினை அல்ல. "குர்திஸ்தான் பிரதேச அரசின் (Kurdistan Regional Government) நிர்வாகத்தில் வாழுகின்ற 15 வயதுக்குக் குறைவான பிள்ளை களைப் பொறுத்த வரையில், ஈரானில் உள்ள அதே வயதுப் பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது, சுவாசப்பகுதி தொடர்பான வைரசுகள்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

# இறுக்கமாகும் களமுனையும் பரிசோதிக்கப்படும் புதிய ஆயுதங்களும்



வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

யேமனில் 8 வருடங்களாக இடம்பெற்ற போரை முடிவுக்கு கொண்டு வந்ததில் சீனா முக்கிய பங்கு வகித்தது தற்போது தெரியவந்துள்ளது. யேமன்அரசுக்குஆதரவாகசவுதி அரேபியாவும், போராளிக் குழுக்களுக்கு ஆதரவாக ஈரானும் செயற்பட்டதாக கூறப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய போரில் 2015 ஆம் ஆண்டு சவுதி அரேபியா பங்கு கொண்ட போதும் போர் மற்றும் பொருளாதார தடைகளால் அங்கு 350,000 மக்கள் கொல்லபட்டுள்ளனர். அவர்களில் 85000 பேர் சிறுவர்கள்.

போரை முடிவுக்கு கொண்டுவரப் போவதாக அமெரிக்கா தெரிவித்தாலும் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை. ஆனால் ஈரானுக்கும், சவுதி அரேபியாவுக் கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உறவினால் இந்த போரை நிறுத்தியுள்ளது சீனா.

ஆயுத விற்பனையை முக்கிய வருமானமாக கொண்டுள்ள அமெரிக்காவுக்கு இது கசப்பானதே. எனவே தான் பிராந்திய நாடுகளுடன் கூட்டணி வைத்தது தொடர்பில் சவுதி மீது தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார் அமெரிக்க புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏயின் தலைவர் வில்லியம் பேர்ன்ஸ். அமெரிக்காவின் மிகப் பெரும் ஆயுத இறக்குமதியாளர்களில் சவுதியும் ஒன்று.




உலகில் போர்களை நிறுத்திவிட்டால் அமெரிக்காவின் பொருளாதாரத்தை ஆட்டம்காண வைக்கலாம் என்ற திட்டம் சீனாவினுடையதாக இருக்கலாம், எனவே தான் சூடானிலும் போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவர அது எத்தனித்துள்ளது.

சூடானில் இரு ஜெனரல்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியினால் மோதல்கள் எழுந்ததாக கூறப்பட்டாலும், கடந்த பெப்ரவரி மாதம் சூடான் அரசு செங்கடல் பகுதியில் ரஸ்ய கடற்படை தளம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியதும் காரணமாக இருக்கலாம் என கூறப்படுகின்றது. இந்த அனுமதி குறித்து கருத்து தெரிவித்தசூடானுக்கானஅமெரிக்கதூதுவர்ஜோன் கோட்பெரி சூடான் பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என தெரிவித்திருந்தார்.

சூடானின் தற்போதைய நெருக்கடியில் வெளிநாடுகளின் தலையீடுகளையும் மறுக்க முடியாது. ஏனெனில் சூடானின் விரைவு நட வடிக்கை படையினருக்கு ஒரு விமானம் ஆயுதங்களை அனுப்பியுள்ளதாக லிபியாவின் தேசிய இராணுவத்தின் தளபதி தெரிவித்துள்ளதாக த வோல் ஸ்றீற் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

இதனிடையே உக்ரைனின் களமுனை இந்த வாரமும் பரபரப்பாகவே இயங்கி வருகின்றது. முக்கிய நிகழ்வாக ரஸ்யாவின் அதிபர் விளமிடீர் பூட்டீன் கைப்பற்றப்பட்ட கேர்சன் மற்றும் டொன்பாஸ் பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்டு களநிலைமைகளைஆய்வு செய்துள்ளஅதேசமயம், உக்ரைன் அதிபர் விளமிடீர் செலன்ஸ்கியும் போலந்து மற்றும் பெலாரூஸ் எல்லையில் உள்ள உக்ரைன் பகுதிக்கு சென்று ஆய்வுகளை மேற் கொண்டுள்ளார்.

நேட்டோவின் தலைவர் ஸ்ரோல்ற்றன் பேர்க்கும்கடந்தவியாழக்கிழமை(20) உக்ரைனுக்கு சென்றுள்ள அதேசமயம், உக்ரைனுக்கு நேட்டோ நாடுகளால் வழங்கப்பட்ட கனரக ஆயுதங்களும் உக்ரைனுக்குசெல்லஆரம்பித்துள்ளன. பெற்றியாட் வான் பாதுகாப்பு ஏவுகணைகளை ஜேர்மனி அனுப்பியுள்ள அதேசமயம், ஏனைய நாடுகள் லெபார்ட் டாங்கிகளையும் அனுப்பியுள்ளன. இந்த வாரம் மேலும் 325 மில்லியன் டொலர்கள் ஆயுத உதவியை அமெரிக்கா உக்ரைனுக்கு வழங்கியுள்ளது.



வலிந்த தாக்குதல் தொடர்பான விளக்க வரைபடம் தொடர்பான மாதிரி கட்டமைப்பை தனக்கு வழங்குமாறு செலன்ஸ்கி தனது படைத் துறை தலைவரிடம் கேட்டுள்ளார்.

ஒருபுறம் உக்ரைனில் மேற்கொள்ளப்படும் வலிந்த தாக்குதலுக்கான ஆயத்தங்கள் மேற் கொள்ளப்படுகையில் தாய்வான் களமுனையும் மெல்ல மெல்ல சூடாகி வருகின்றது. அண்மையில் தாய்வானுக்கு அமெரிக்கா 400 கையூன் வகை கப்பல்களை அழிக்கும் ஏவுகணைகளை அனுப் பியுள்ளதானது சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமான முறுகல்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளரின் பயணத்திற்கு அனுமதி மறுத்துள்ள சீனா, அமெரிக்க படை அதிகாரிகளின் தொலைபேசி அழைப்புக்களையும் தொடர்ந்து புறக்கணித்து வருவதாக அமெரிக்காவின் பாதுகாப்பு தலைமையகத்தின் பிரதி தலைவர் கோலின் கல் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், எல்லா தரப்பினரும் தமது நவீன ஆயுதங்களை தொடர்ந்து பரீட்சித்து வருகின்றனர். சீனா WZ8 எனப்படும் ஒலியைவிட 3 மடங்கு வேகத்தில் செல்லும் ஆளில்லாத உளவு விமானத்தை தயாரித்து வருவதாகவும், இது 100,000 அடி உயரத்தில் இருந்து உடனடியாக தகவல்களை திரட்டுவதுடன், ஏவுகணைகளையும் வழிநடத்தும் என பென்ரகனில் இருந்து அண்மையில் கசிந்த தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்காவும் புதிய Minuteman III எனப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை இந்தவாரம் பரீட்சித்துள்ளது. இந்த புதிய ஏவுகணையின் வரவு என்பது அணுவாயுத போருக்கான படையினர் தயார் என்பதை காட்டுவதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அமெரிக்காவின் புலனாய்வுத் துறையினரை மேற்கோள்காட்டி த வொசிங்டன் போஸ்ட் வெளியிட்ட தகவல்களின் அடிப் படையில் ரஸ்யா புதிய இலத்திரனியல் போர் சாதனங்களை உக்ரைன் களமுனையில் பரீட்சித்து பார்ப்பதாக தெரிவித்துள்ளது.



Tobol எனப்படும் இந்த சாதனம் ரஸ்யா தனது செய்மதிகளை பாதுகாப்பதற்கு தயாரித்தது ஆனால் தற்போது அதனை எதிரிகளின் செய்மதிகளை தாக்குவதற்கு பயன்படுத்துகின்றது. உக்ரைனுக்கு வழங்கப்பட்ட இணையத்தள செய்மதி தொலைதொடர்பு Starlink சாதனங்கள் செயலிழந்து போனதற்கு ரஸ்யாவின் Tobol தான் காரணமா இல்லை ரஸ்யாவின் மற்றும்மொரு Tirada-2S எனப்படும் இலத்திரனியல் சாதனம் தான் காரணமா என்பதை அமெரிக்காவினால் உறுதிப்படுத்த முடியாது உள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி 10ஆம் பக்கம்

## பெருந்தோட்ட ... தொடர்ச்சி...

அதனால் சாதக விளைவுகள் அதிகரிக்குமென்றும் இதனூடாக ஒரு நாகரீகமான வாழ்க்கைச் சூழலை நோக்கி அடியெடுத்து வைக்கும் நிலை உருவாகுமென்றும் புத்திஜீவிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த வகையில் நாட்டின் எழுச்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் பெருந்தோட்ட சமூகம் ஒரு சதுர அடி நிலமேனும சொந்தமாக இல்லாத நிலையில் வாழ்க்கையை தொலைத்துக் கொண்டிருப்பது வருந்தத்தக்கதாகும். இது சாபக்கேடோ என்று கூட சில வேளைகளில் எண்ணத் தோன்றுகின்றது. இந்நிலையில் பெருந்தோட்ட நிலங்களை வெளியாருக்கு தாரை வார்க்காது தேயிலையின் வளர்ச்சிக்கே உழைத்து உரமாகிப்போன, தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களின் வாழ்க்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்த அரசாங்கம் முனைதல் வேண்டும். இதனிடையே வெளியார் உற்பத்தி முறை தொடர்பில் கம்பெனிகள் அதிகமாக வலியுறுத்தி வரும் நிலையில் இந்நிலையானது எதிர்காலத்தில் பெருந்தோட்ட சமூகம் நிலவுடைமை மற்றும் வீட்டுடைமை சமூகமாக மாற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமையும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் நோக்கத்தக்கதாகும்..எனவே இதன் நம்பகத்தன்மையை கருத்தில் கொண்டு இவ்விடயம் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

• • •

## இறுக்கமாகும் கள ... தொடர்ச்சி ...

ரஸ்யாவிடம் *Tobol* ரக சாதனங்கள் *7* இருப்பதாகவும் அவற்றில் *3* மொஸ்கோ, கிரைமியா மற்றும் கிலினிங்கிராட் பகுதிகளில் உள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதனிடையே, சிரியாவில் உள்ள ரஸ்ய படையினரை குருதிஸ் போராளிகிளின் துணையுடன் உக்ரைன் படையினர் தாக்க திட்டமிட்டுள்ளது அமெரிக்காவில் இருந்து கசிந்த தகவல்கள் மூலம் அம்பலமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதேசயம் அண்மையில் சிரியா மீது தாக்குதல் நடத்த சென்ற இஸ்ரேலின் ஆளில்லாத தாக்குதல் விமானங்களில் *(Skylark)* ஒன்று சிரியாவில் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது தற்போது அம்பலமாகியுள்ளது. எனினும் அந்த விமானத்தில் உள்ள தரவுகளை தாம் அழித்துவிட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரானின் வான்படை தளத்தின் மாதிரி கட்டமைப்பு ஒன்று இஸ்ரேலில் கண்டறியப்பட்டுள்ளதானது இஸ்ரேல் ஈரானை தாக்க திட்டமிடுகின்றதா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. அதாவது பல களமுனைகள் வெடிப்பதற்கு தயாராக இருப்பதை தான் இந்த சம்பவங்கள் காண்பிக்கின்றன.

உலகின் அன்னிய கையிருப்பு பணமாக இருந்த அமெரிக்க டொலர் தற்போது *50* விகிதமாக குறைந்துள்ளதாக த பைனாஸ்ஸியல் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. அமெரிக்கா தனது நாணயத்தின் வீழ்ச்சியை விரும்பாது. அதேசமயம் அதனை மேலும் வீழ்த்தும் முயற்சியாக ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் ராரோவின் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான சுற்றுப்பயணம் அமைந்துள்ளது.

பிரேசில், நிக்கரகூவா, வெனிசுலா மற்றும் கியூபாவுக்கான அவரின் பயணம் என்பது போருக்கு அணிதிரட்டும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

• • •

## ஆக்கிரமிக்கும் ... தொடர்ச்சி ...

தொடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து சட்டத்தரணிகள், சுமந்திரன், சிறீகாந்தா ஆகியோர் வாதங்களை முன் வைத்தனர். சிலை வைக்கப்படுவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை என்றும் ஆனால், அதற்கு உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து வழக்கு தொடர்பில் எழுத்து மூல சமர்ப்பணங்களை செய்யுமாறு நீதிபதி உத்தர விட்டார். இதைத் தொடர்ந்து இந்த வழக்கை எதிர்வரும் மே *4*ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்தவிவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்பட்டிருந்தமை மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருக்கின்றது. இந்து அமைப்புக்களும் விட்டுக்கொடுப்பதில்லை என்ற உறுதிப்பாட்டுடன்தான் நீதி zமன்றத்துக்குச் சென்றிருந்தார்கள்.

பண்ணைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த அம்மன் சிலை குறித்து புதிய வரலாற்றுத் தகவல் ஒன்றை இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்திருக்கின்றார். அவர் தெரிவித்திருப்பது இதுதான்-“யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்த அருள்மிகு நாகபூசணித் திருவுருவம் வரலாற்றுச் சிறப்புடைது. மகாவம்சம் கூறும் மகோதரனும் குலோதரனும் அவன் முன்னோரும் வழிபட்டது. அத்திருவுருவத்தை முதலில் அழித்தவர் போர்த்துக்கேயக் கத்தோலிக்கர். ஒல்லாந்தர் காலத்திலும் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைக்கவில்லை. ஆங்கிலேயர் காலத்தில் பண்ணையில் அருள்மிகு நாகபூசணித் திருவுருவத்தை மீளமைத்தனர். மகாவம்சம் கூறும் நாக மன்னர்களான மகோதரனும் குலோதரனும் முன்னோரும் வழிபட்ட திருவுருவத்தையே மீளமைத்தனர். பண்ணைப் பாலம் கட்ட முன்பு, படகில் மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு செல்வோர் பண்ணைக் கடலைக் கடந்தனர். அருள்மிகு நாகபூசணி திருவுருவத்தை வணங்கி வழிபட்டே படகுகளில் ஏறினர். அங்கிருந்து படகுகளில் வந்து கரையிறங்கி யாழ்ப்பாணம் செல்வோரும் வணங்கி வழிபட்டு மாநகர் புக்கனர்.”

இவ்வாறு மறவன்புலவு சச்சி சொல்லியிருக்கின்றார். சிலைகள் தமிழ் சிங்கள மக்களை அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து திசை திரும்ப வைக்கின்றது. தமிழ்த் தலைமைகள் அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கல் என்பவற்றை விட்டுவிட்டு உள்ள சிலைகளைப் பாதுகாப்பதிலும், புதிய சிலைகளை வைப்பதிலும் கவனத்தை குவித்துள்ளார்கள். சிங்கள மக்களும் அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து சற்று விலகி தொல்பொருள் திணைக்களத்தின் சாகசங்களைப் பார்த்து ரசித்துக்கொண்டிருக்கின்றார்கள். பொருளாதார நெருக்கடியால் பாதுக்கப்பட்டுள்ள சிங்கள மக்களுக்கு தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் சிங்கள தேசியவாதத்தை வலுப்படுத்துகின்றது.

• • •

## மேலதிக வாயு ... தொடர்ச்சி...

அவர்களுக்கு இரண்டு மடங்காக இருப்பதாக” குளோபல் பீடியாற்றிக் ஹெல்த் *(Global Paediatric Health)* என்ற அமைப்பு மேற்கொண்ட ஒரு ஆய்வின் முடிவு தெரிவித்தது. தங்களது பிரதேசத்தில் வாழும் மக்களின் ஆரோக்கியம் கடுமையாகப் பாதிக்கப்படுவதன் காரணத்தால் *2023*ம் ஆண்டில் பெற்றோலிய வாயுவை எரிக்கும் நடைமுறையைக் குறைக்குமாறு அந்தப் பிரதேச அரசு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு நிறுவனங்களுக்குக் கட்டளையிட்டது. *18* மாத அவகாசத்தை அவ்வாறான நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட அரசு வழங்கியிருந்தது.

*2018*ம் ஆண்டிலிருந்து *2022*ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை செய்மதிகள் மூலம் திரட்டப்பட்ட தரவுகளைப் பார்க்கும் போது, மேலதிக வாயுவை எரிக்கும் நடைமுறையில் மாற்றம் ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. சுற்றாடலை ஆய்வு செய்யும் ஈஆர்சி *(Environmental Reporting Collective)* என்னும் அமைப்பின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு நடவடிக்கையாக குறிப்பிட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஏர்பில் நகரமும் அதனைச் சுற்றியிருக்கும் கவர்கொஸ்க் மற்றும் லலிஷ் *(Lalish)* உட்பட்ட கிராமங்கள் மற்றும் குடியிருப்புகளே இவ்வாறான வாயு எரிக்கும் நடைமுறையால் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன என்றும் அந்த ஆய்வின் முடிவு மேலும் தெளிவுபடுத்தியது.

குளிர்காலத்தில் இவ்வாறான வாயு எரிக்கும் நடைமுறையில் ஒரு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. அதற்குக் காரணம் என்னவென்றால் இவ்வாறாக உற்பத்தி செய்யப்படும் வாயு நேரடியாக வீடுகளுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் கோடை காலத்தில் வீடுகளால் அந்த வாயு அதிகம் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் *2018*ம் ஆண்டு மற்றும் *2019* ஆண்டுகளில் பெறப்பட்ட வரலாற்று ரீதியிலான தரவுகளுடன் ஒப்புநோக்கும் போது, வாயுவை எரிக்கும் செயன்முறை குறைந்ததாகத் தெரியவில்லை. கோடைகாலங்களில் எரிவாயுவை எரிக்கும் செயற்பாடுகள் மீண்டும் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டது. வெப்பம் அதிகமான காலங்களில் வீடுகள் வாயுவை அதிகம் பயன்படுத்தவில்லை.

**நன்றி: அல்ஜஸீரா**

## பயங்கரவாத ... தொடர்ச்சி...

பாராளுமன்றம் ஆகிய இரண்டிலும் விரிவான விவாதங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற தங்களது ‘வலுவான விருப்பத்தை’ பகிர்ந்து கொண்டதாகவும் அவர் கூறியுள் ளார்.

சிவில் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் சட்டம் இயற்றுபவர்கள் உட்பட அனைவரது கருத்துச் சுதந்திரம் அல்லது ஒன்றுகூடலை கட்டுப்படுத்தாமல், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கான ஒரு சிறந்த கருவியாக, குறித்த சட்டமூலம் செயல்படுவதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும் எனவும் அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

## வடக்கு - கிழக்கில் ... தொடர்ச்சி...

கொண்டு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும்,

எமது இனத்தின் இருப்பை கேள்விக் குறியாக்கும் பேரினவாத அரசின் திட்டமிட்ட, எமது சுயநிர்ணய உரிமையை நீர்த்துப் போக வைக்கும் வகையில் எமது தாயக மண்ணில் முன்னெடுக்கப்பட்டு வரும் நில அபகரிப்பு, குடியேற்றங்களின் மூலம் குடிப்பரம்பலை சிதைத்தல், எமது தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுககளை அழித்தொழித்தல், இதற்கு ஏதுவாக தமிழ் மக்களின் தொன்மையை வெளிப்படுத்தும் சான்றுகளான சைவ ஆலயங்களை இடித்தும், அழித்தும், பௌத்த சின்னங்களை நிறுவியும், இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்களின் வரலாற்றை சிதைக்கும் அரசின் அனைத்து கட்டமைப்புக்களின் செயற்பாட்டை எதிர்த்தும், அனைத்து தரப்பினரும் இணைந்து இந்த ஹர்த்தாலை முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா மனித உரிமை ... தொடர்ச்சி...

திரட்டப்பட்ட ஆதரங்களின் அடிப்படையாக் கொண்டு மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் தீர்ப்பாயத்தின் *17* பேரடங்கிய நீதியரசர் குழாம் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினருக்கு ஆதரவாகவும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

## ஒரு அரசியல் ... தொடர்ச்சி ...

சொன்னால், சட்ட நீதிக்கு அப்பால், அரசியல் தீர்மானம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். சட்ட நீதி என்று போனால் மேலும் அவர்களின் சிறைக்காலம் நீளும். ஆகவே அரசியல் தீர்மானம் ஒன்று எடுத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்தால் தான் இந்த 24 கைதிகளுக்கும் விடுதலை கிடைக்கும்.

**இதை நாம் இரண்டு பிரிவாக பார்க்கலாம்,**

1 – இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினுடைய அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள ஜனாதிபதிக்குரிய உயர் அதிகாரம். அந்த அதிகாரத்தில் அவர் ஓர் மன்னிப்பையோ, அல்லது தண்டனைக்குறைப்பையோ செய்ய முடியும். இது நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட்ட கைதிகளுக்கு மாத்திரம் செய்ய முடியும். இந்த அடிப்படையில்தான் என்னுடைய விடுதலையும் சாத்தியப்பட்டிருக்கின்றது.

2- வழக்குக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற 14 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் தான் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

ஆகவே சட்டமா அதிபருடனும் நீதி அமைச்சருடனும் ஓர் பேச்சுவார்த்தையை நடத்தி ஜனாதிபதி ஒரு ஆலாசனையை வழங்கி, தீர்வு காண முடியும் என்று கடந்த கால பட்டறிவுகள் சொல்லியிருக்கு. அதாவது நாட்டினுடைய தேச நலனை அடிப்படையாகக் கொண்டு அவாகள் மீது தொடரப்பட்ட வழக்குகளை சட்டமா அதிபர் மீளப்பெற வேண்டும். அவ்வாறு அவர்களின் வழக்குகள் மீளப்பெறப்பட்டால் இந்த 14 சந்தேக நபர்களும் விடுதலை பெறுவார்கள். இந்த இரண்டு வழியும் தான் அவர்கள் 24 பேரும் விடுதலை பெறுவதற்கு இருக்கும் வழி என்று நான் நினைக்கின்றேன்.

**கேள்வி:**

**விடுதலைக்குப் பின் உங்களுடைய மன நிலை எவ்வாறு உள்ளது? என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

**பதில்-**

நான் சிறையில் இருந்து வெளியில் வரும் போது கண்ணீரோடு தான் வந்தேன். ஏனெனில் ஏனையவர்களும் விடுதலை பெற வேண்டும். நான் அவர்களின் விடுதலைக்காக உதவுவேன் என்று அவர்களும் நம்புகின்றனர். ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஆழமாக உள்ளது.

நான் உண்மையிலேயே முதலில் நன்றி சொல்ல விரும்புவது ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களுக்குத்தான். அவர்கள் தான் பல நெருக்கடிக்கு மத்தியில் எமது பிரச்சினைகளை பேசினார்கள். அது எமது விடுதலைக்கும் பெரும் உதவியாக உள்ளது. அத்தோடு சமூக செயற்பாட்டாளர்களுக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

**கேள்வி:**

**உங்களுடைய கைது, விடுதலை குறித்து சிறையில் உள்ள சிங்கள சகோதரர்களின் மன நிலை என்ன?**

**பதில்-**

முதலில்எமக்குமொழிப்பிரச்சினைஉண்டு. நாம் சிங்கள மொழியை கற்றிருக்க வேண்டும். அவர்கள் தமிழ் மொழியை கற்றுக்கொள்ள வேண்டும். இது வந்து சதிசுக்கும் சம்பந்துக்கும் இடையிலான உரையாடலுக்கு இல்லை. இது இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள இரு மொழிகளையும் இருவரும் கற்றுத் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் எம்முடைய பிரச்சினைகளை அவர்களுக்கு கூற முடியும். எம்மைக் கைது செய்பவர்கள் சிங்கள இராணுவத்தினர். அவர்களுக்கு நாம் சொல்வது புரியாது. எனக்கு அவர்கள் சொல்வது புரியாது. இதனால் நிறைய சிக்கல்களை நாம் எதிர்கொள்கின்றோம்.

தமிழர்களின் பிரச்சினைகள் அங்குள்ள சிங்கள மக்களுக்கு தெரியாது. நாம் பழகிய வரையில் அவர்களுக்கு எதுவும் தெரியாது. விடுதலைப்போராட்டம் குறித்து அவர்கள் ஒரு கற்பனையில் இருந்தார்கள். எம்முடன் பேசிய பின் அந்த கற்பனையில் இருந்து அவர்கள் நொறுங்கிப் போனார்கள். நாம் ஏன் போராடுகின்றோம் என்றே அவர்களுக்குத் தெரியாது. இதன் பின் நான் சிங்கள மொழி கொஞ்சம் படித்துக்கொண்டேன். நாம் அவர்களின் மொழியில் எங்களுடைய பிரச்சினைகளை சொல்லும் போது அவர்களுக்கு நாம் வஞ்சிக்கப்படுகின்றோம் என்பது புரிகின்றது. எனவே எமது பிரச்சனைகளை அடித்தட்டு சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

**முற்றும்**

• • •

## அவுஸ்திரேலியா ... தொடர்ச்சி ...

அதில், "இந்த போராட்டங்களின் போது பல அகதிகள் தங்களது உதடுகளைத் தைத்துக் கொண்டனர். நானே ஒருமுறை அவ்வாறு தைத்துக் கொள்ள முயற்சித்தேன். பல சமயங்களில் அகதிகள் வருத்திக்கொள்ளவும் தற்கொலைக்கு முயலவும் செய்ததைக் கண்டிருக்கிறேன். ஒரு முறை ஒரு அகதி தனக்குத்தானே தீ மூட்டிக்கொண்டதையும் கண்டேன். எனது நண்பன் உயிரிழந்த போது நானே தற்கொலைக்கு முயன்றேன்," என தெரிவித்திருக்கிறார் அந்த ஈரானிய அகதி.

மனுஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூழலை பகிர்ந்த பர்மிய அகதி, "அவுஸ்திரேலிய, உள்ளூர் (பப்பு நியூ கினியா) காவலாளிகள் எனது கண்களையும் வாயையும் தாக்கினர். கடினமான காலணிகளை அணிந்திருந்த அவர்களின் ஒவ்வொரு உதையும் எனக்கு மிகுந்த வலியை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலினால் எனது ஆறு பற்களை இழந்தேன், எனது கண்பார்வையும் பாதிக்கப்பட்டுள்ளது," என அவர் கூறியிருக்கிறார்.

இப்படி பல நாட்டு அகதிகள் தங்களுக்கு நேர்ந்த கொடுமைகளை பகிர்ந்திருக்கின்றனர்.

இவ்வாறு அவுஸ்திரேலியாவின் கடல் கடந்த தடுப்பு முகாம்களில் சிறைவைக்கப் பட்டவர்கள் தொடர்பாக அரசின் தரவுகளின் அடிப்படையில் ஆஸ்திரேலிய அகதிகள் சபை விரிவான தகவலை வெளியிட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஓகஸ்ட் 2012 முதல் இத்தடுப்பு முகாம்களில் 4,183 அகதிகள் சிறைவைக்கப்பட்டிருந்திருக்கின்றனர்.

பப்புநியூகினியாவில் அவுஸ்திரேலியா அகதிகளை தடுத்து வைப்பது சட்டவிரோத மானது என கடந்த 2016ம் ஆண்டு அத்தீவு நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதன் தொடர்ச்சியாக பப்பு நியூ கினியாவில் சிறைவைக்கப்பட்டிருந்த 1,923 அகதிகளுக்கு 70 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்கள் இழப்பீட்டை வழங்க வேண்டும் எனஅவுஸ்திரேலியநீதிமன்றம்தீர்ப்பளித்தது. அகதிகள் சிறைவைக்கப்பட்டிருந்த கால அளவு, உடற்காயங்களின் அடிப்படையில் அப்பணம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இம்முகாம்களில் இருந்த பெரும்பாலான அகதிகள் வேறொரு நாட்டிலோ அல்லது அவுஸ்திரேலியாவிலோ மீள்குடியமர்த்தப் பட்டுள்ளனர். 749 அகதிகள் சொந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். கடந்த பிப்ரவரி 2023 கணக்குப்படி, பப்பு நியூ கினியாவில் 105 அகதிகளும் நவுருத்தீவில் 61 அகதிகளும் இன்னும் சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த சூழலில், அவுஸ்திரேலியா பாணி யில் அகதிகளை கடல் கடந்த தடுப்பு முகாம்களில் சிறைவைக்கும் முறையினை ஐக்கிய இராச்சியம் நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றமை இங்கு குறிப் பிடத்தக்கது.

## இரண்டு இராணு ... தொடர்ச்சி ...

இருந்த அரச தலைவரை இராணுவப் புரட்சி மூலம் அகற்றியிருந்தனர். அதன் பின்னர் அமைக்கப்பட்ட இடைக்கால அரசில் போஹான் தலைவராகவும், ஹம்டன் துணைத் தலைவராகவும் பணியாற்றி வந்திருந்தனர்.

எனினும் தற்போது இடைக்கால அரசை பொது மக்களிடம் கையளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து அதிகார போட்டி எழுந்துள்ளது.

அங்கு 15 ஆம் நாள் ஆரம்பமாகிய மோதல்கள் இன்றும் தொடர்ந்து வருகின்றது. முக்கிய படை தளங்கள் மற்றும் விமான நிலையங்கள் இரு தரப்பினரிடமும் கைமாறி வருவதாகவும், மக்களுக்கான உணவு கையிருப்பு இரண்டு நாட்களுக்கே போதுமானதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அதிக வெப்ப ... தொடர்ச்சி ...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் 1.4 பில்லியன் சனத் தொகையில் 80 விகிதமானவர்கள் வெப்பத்தின் தாக்கத்திற்கு உட்பட்டவர்களாகவும், இந்தியாவின் 90 விகிதமான பகுதிகள் அதிக வெப்பநிலை உடையாகவும் மாற்றம் பெற்றுவருகின்றன.

மிக அதிக வெப்பம் இந்தியாவின் வெளியக தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 15 விகித வீழ்ச்சியை ஏற்படுத்தும், இது ஏறத்தாள 480 மில்லியன் பணியாளர்களின் தொழில்களை பாதிக்கும். இந்த தாக்கம் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 2.8 விகித வீழ்ச்சியை 2050 களில் ஏற்படுத்தும்.

அதிக வெப்பத்தால் ஏற்படும் தொழில் இழப்புக்களால் இந்தியாவின் மொத்த உற்பத்தி ஏறனவே 5.4 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொருளாதாரத்தில் ... தொடர்ச்சி...

வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இத்தாலி, யப்பான், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் ஜி-7 கூட்டணியிலும், இந்தியா, சீனா, ரஸ்யா, பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்பிலும் உள்ளன.

அல்ஜீரியா, இந்தோனேசியா, பஹரைன், பாகிஸ்தான், ஈரான், எகிப்த்து, பங்களாதேசம் உட்பட 12 இற்கு மேற்பட்ட நாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்பில் இணைவதற்கு ஆர்வம் காண்பித்து வருவதாகவும், பிறிக்ஸ் கூட்டமைப் பின் வங்கியான புதிய அபிவிருத்தி வங்கியில் சவுதி அரேபியா, பங்களாதேசம் மற்றும் எகிப்த்து ஆகிய நாடுகள் ஏற்கனவே இணைந்துள்ளதாகவும் ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்து ள்ளார்.

**அன்பு நேயர்களுக்கு!**

எமது எதிர்கால சிற்பிகளான தமிழ் சிறார்களின் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டு மேம்பாட்டினை இலக்காக கொண்டு வெளிவரும் இலக்கு வார இதழின் சிறுவர் தளத் திற்கான தங்கள், ரைகள், கவிதைகள், ஓவியங்கள் மற்றும் வாழ்வுக்கு வழிகாட்டும் தமிழர் நாகரீகம் தொடர்பான சிறு குறிப்பு கள் ஆகியவற்றை பகிர்ந்து ஓர் செழிப்பான நிலைத்த எதிர்கால தமிழ் சந்ததியை உருவாக்க இணையுமாறு இலக்கு உங்களை வரவேற்கிறது!

தொடர்புகளுக்கு : info@ilakku.org

# The ghost

*As I approached the deserted house at the end of the road. I saw a ghost with white saree. It was a rainy day and night time . So I was afraid. Further I watched deeply the ghost and the ghost too watched me .*

*So I started running to my house. I ran very fast and fallen in to a small pit . Finally I reached home and said my whole family what had happened. First they laughed but they realized my fearfullness and they went to the deserted house.*

*We reached the deserted house and went into house and searched everywhere in the house. Finally we found that ghost, sorry that's my false that was not a ghost. She was a begger*


*Further my family laughed loudly because of me . Then we asked the lady come to with us. And she came to with us. We gave a dress to her and gave some foods. She ate and went to sleep. Finally she was happy and stayed with us.*

*But I can't forget that day. Every time my mom says and they teased me . But I like that moment. Because it's a good memory for me. I like to say thanks God .because of that day*

***S. Thikazhini***- T/Selvanayagapuram Hindu maha vidyalayam



**P. ஏஞ்சனா**
நிலாவெளி



**வி.வினுஜன்**
தி/தி/கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயம்

# அபகரிக்கப்படும் நிலங்கள்....





